# நாடு பூராவிலும் பூரண மது ஒழிப்பு

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

கண் 8 (7-9-66) இதழ் 208

பராபவ ஆவணி 22 ஜ அவ்வ 21 புதன்கிழமை

# அமுலுக்கு வரும்
## அரசாங்கத்துக்கு தகநாயக்கா சிபார்சு

கொழும்பு, செவ்வாய் அடுத்த ஆண்டுமுதல் மதுபானம் விற்பனைசெய்வதற்கான லைசென்சுகள் வழங்கப்படமாட்டா.

உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தகநாயகா இந்தமுடிவை செய்திருக்கின்றார். இந்த முடிவின் காரணமாக மதுபானம் விற்பனைசெய்யும் வர்த்தக 'கிளப்'புகளும் ஹோட்டல்களும் பாதிக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

மதுபானத் தவறணைகளை பொது மக்கள் பத்தியில் வாக்கெடுப்பு நடத்துவதின் மூலம் மூடிவிடுவது பற்றியும் உள்நாட்டு அமைச்சர் ஆலோசித்துவருகின்றார்.

1970-ம் ஆண்டு முதல் நாட்டில் பூரண மது ஒழிப்பை அமுல்நடத்தவேண்டும் என்று டாக்டர் தகநாயகா அரசாங்கத்துக்கு சிபார்சு செய்திருக்கின்றார். 1957-ம் ஆண்டு நிறுவப்பட்ட மது ஒழிப்பு கமிஷனின் அறிக்கையின் அடிப்படையிலேயே மந்திரி இந்த சிபார்சுகளை செய்திருக்கின்றார்,

உள்நாட்டு மந்திரியின் புதிய கலாத்திட்டத்தின்படி மதுபாவனையாளர்களை ஒவ்வொருபிரிவாக நிர்ணயித்து அதன்பிரகாரம் மது அருந்துவதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். உள்நாட்டு மதுவகைகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்வதற்கு தனியார் துறையினர் ஊக்கமளிக்கப்படுவர். மது ஒழிப்பை பூரணமாக அமுல் நடத்துவதற்குமுன்ன மது ஒழிப்புக்கான தீவிரபிரசாரம் ஒன்றை நடத்துவதுபற்றியும் மந்திரி சிபார்சுசெய்திருக்கின்றார்,

புதிய மதுபான கடைகளுக்கும் தவறணைகளுக்கும் லைசென்ஸ் வழங்காமல் விடுவது பற்றி[illegible]ம் நாட்டில் பூரண [illegible] ஒழிப்பைக்கொண்டுவருவதுபற்றியும் மந்திரிசபை விரைவில்ஆலோசனை நடத்தும் என்றும் அறியப்படுகின்றது. ——

யாழ்ப்பாணம், புதன் வண்ணை. ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் மஹஉற்சவம் இம் மாதம் 15ம் தேதியிலிருந்து 30 ம் தேதிவரை நடைபெறும்.

# "தலைசிறந்தது தமிழ் பண்பாடே"
## வெளி நாடு சென்று திரும்பிய உடுப்பிட்டி எம். பி. கருத்து
### விமான நிலையத்தில் உற்சாகமான வரவேற்பு

மாவிட்டபுரம், புதன் தமிழ்மக்களின் கலை, கலாச்சாரம் உலகில் எல்லா நாடுகளின் கலை கலாச்சாரங்களையும் விடசிறந்து விளங்குவதன் உண்மையை அமெரிக்காவில் நான் தங்கியிருந்தகாலத்தில் அறிந்துகொண்டேன். சர்வதேச பிரதிநிதிகள், உலகப் பேரறிஞர்கள் இவ்வுண்மையினை மனதார

(8-ம் பக்கம் பார்க்க)

## சதி வழக்கு இன்று விசாரணை

கொழும்பு, செவ்வாய் புரட்சிசதி வழக்கு நாளைகாலை கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

திருமதி பண்டாரநாயக்காவுக்கும் திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவுக்கும் சதிமுயற்சியில் சம்பந்தமுண்டு என்று கடந்த முறை சாட்சியமளித்தவர்களை அட்டோர்னி ஜெனரல் திரு. ஏ. சி. எம். அமீர் நாளைய தினம் நேரில் விசாரணை செய்வார்.

## மருத்துவத்தாதிகள் மாநாட்டில் நிறைவேறியதீர்மானங்கள்

யாழ்ப்பாணம், புதன் 'தமிழ் மருத்துவத் தாதிகள் மத்தியிலிருந்தும்கடந்தகாலத்தில் மேற்பார்வை மருத்துவ தாதிகள் தெரிவு செய்யப்படாதமையை கவலையுடன் தெரிவிக்கும் இச்சபை, அதிகப்படியான மேற்பார்வை மருத்துவ தாதிகளை தமிழ்ப் பகுதிகளில் நியமிக்க நடவடிக்கையை எடுக்குமாறு சுகாதாரஇலாகா அதிபரையும் சுகாதார மந்திரியையும் கோருகிறது'.

தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் சார்பிலுள்ள மருத்துவ தாதிகள் மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

இம் மகாநாடு நேற்றுக்காலை தேசிய தொழிற்சங்க சம்மேளன காரியாலயத்தில் திரு. ஏ. செந்தில்நாயகம் தலைமையில் நடைபெற்றது.

இம் மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன,

மருத்துவத் தாதிகள் கடந்த காலங்களைவிட இப்போ அதிகப்படியான கடமைகளைச்செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதால் மருத்துவத் தாதிகள் சம்பளம், கடமையாதியன பற்றி ஆராய்ந்து ஏற்ற ஊதியம் கொடுக்கக்கூடியதான நிவாரணம்தருமாறு மந்திரியைக் கேட்டுக்கொள்கிறோம்.


சகல மருத்துவத் தாதிகளையும் பென்சன் உரிமைக்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதன் மூலம், ஏற்கனவே பென்சன் உரிமைக்கு மாற்றப்பட்ட மருத்துவத் தாதிகளின் வெட்டப்பட்ட சகாய நிதிப்பணத்தை உடனடியாகக்கொடுக்க நடவடிக்கையெடுக்க வேண்டும்.

சில மருத்துவ மனைகளில் ஒரேமருத்துவதாதியே தனித்து இரவும், பகலும், கடமையாற்றவேண்டியிருப்பதால், நிலமையைமாற்ற நடவடிக்கையை கையாளுமாறு இலாகா அதிபரைக் கோருகிறோம்.

கிராம மருத்துவத்தாதி

(8-ம் பக்கம் பார்க்க)

## 'லக்கி சான்ஸ்' யாருக்கு?



நாளை நல்லூரில் தேசியலொத்தர் சபையின் 106-வது சீட்டிழுப்பு மூலம் பரிசாக வழங்கப்படவிருக்கும் இக்கார்கள் யாழ். ஐக்கியவியாபார சங்கத்தின் முன் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# தென் ஆபிரிக்க பிரதமர் கொலை!
## பார்லிமெண்டுக்குள் வெள்ளையர் ஒருவரால் குத்தப்பட்டார்

லண்டன், செப். 6

தென்ஆபிரிக்க பிரதமர் டாக்டர் வேர்வூட் இன்று வெள்ளையர் ஒருவரால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

பார்லிமெண்டில் பேசஎழுந்த சமயத்திலேயே இவர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

பார்லிமெண்டில் கடமையாற்றும் கிரேக்க இனத்தைச்சேர்ந்த பணியாளர் ஒருவர் இவரது கழுத்தில் பலமாகக் குத்தியதாகவும் குத்தப்பட்டு கால்மணி நேரத்தில் இவர் மரணமடைந்தார் எனவும் அறிவிக்கப்பட்டது

டாக்டர்வேர்வூட்1958-ம் வருடத்தில் பிரதமராகப் பதவியேற்றார். இவர் இனத்துவேஷக் கொள்கையைக் கடைப்பிடித்து பெரும்பான்மையான நீக்ரோக்களை சட்டத்தின்மூலம் ஒதுக்கி வைத்திருந்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திராவின் வேண்டுகோள்

புதுடில்லி, செப். 5 இரண்டாவது தடவையும் தொடர்ந்தும் பதவி வகிக்குமாறு ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டை பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சொந்த முறையில் வேண்டியுள்ளார்.

## உலகத்திலேயே மிகப் பெரிய கப்பல்

டோக்கியோ, செப். 6 உலகத்திலேயே மிகப் பெரிய கப்பல் என்றுக் கருதப்படும் இண்டெமிட்சுமாரு என்ற கப்பல் இன்று டோக்கியோவுக்கு 35 மைலுக்கப்பால் வெள்ளோட்டம் விடப்பட்டது. இந்தக் கப்பலின் எடை 209,000 டன். இதுவரை மிகப்பெரிய கப்பலாகக் கருதப்பட்ட டோக்கியோமாரு என்ற கப்பலை விட இண்டெ[illegible] அதிகமா[illegible]

(பி. டி. ஸி)

## 'ரொடீஷிய பிரச்னை நேர்மையாக கையாளப்படவேண்டும்'
### காமன்வெல்த் மகாநாட்டில் மலேசியப் பிரதமர்

லண்டன், செப். 6 ரொடீஷியப் பிரச்னை நேர்மையான முறையில் கையாளப்படவேண்டும். பிரிட்டன் காமன்வெல்த்தில் ஒரு அங்கத்துவ நாடுதான்.'

இவ்வாறு இன்று ஆரம்பமான காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் ஆரம்ப உரைநிகழ்த்திய மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் குறிப்பிட்டார்,

ஆர்ப்பாட்டக்காரர்

மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில்

(8-ம்பக்கம் பார்க்க)

வாங்கிவிட்டீர்களா !

ஈழநாடு நல்லைக்கந்தன் வண்ணமலர்

விற்பனையாகிறது சஞ்சிகைவடிவில்

பக்கங்கள் — 48

விலைசதம் — 50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

டிராக்டர் சாரதிகள்

டிராக்டர் சாரதிகள் தேவை. இவர்களுக்கு, அவர்கள் செய்யும் வேலை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். மனுச் செய்க: திரு. கே. சண்முகம், இல: 135, மீதோட்டமுல்லை வீதி, வெல்லம்பிட்டியா. 1240

### கல்வி

வகுப்புகள்

க. பொ. த. பரீட்சை மார்கழி 1966. விஞ்ஞானம், கலை, வணிகம், ஆங்கிலம், தமிழ்ப்பிரிவுகளுக்கு, பழைய விளுக்களுக்கும் மாதிரிவினுக்களுக்கும் விடை அளிக்கும் வகுப்புகள் நடாத்தப்படும். சேர்வோர் 15-9-66க்கு முன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கலாசாலை, 230, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1238

### விற்பனைக்கு

காணி

காங்கேசன்துறை கல்லூரி வீதியின் பிரதான முடக்கில் இருகரையும் தெருக் கொண்ட தெருவின் வடக்கேயும், மேற்கேயும் உள்ள 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- ந. சுப்பிரமணியம், நீர்மலை. 1107

# யாழ்ப்பாணத்தில் காச நோய் சிகிச்சையில் புதிய முறை

## அடுத்த மாதம் தொடக்கம் செயற்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், செவ்.

அடுத்த மாதம் முதவாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் காசநோய் தடுப்புமுறையில் ஒரு புதிய முறையை கையாள சுகாதார இலாகா இலங்கை தேசிய காசநோய் தடுப்பு சங்கத்தின் உதவியுடன் முனைந்துள்ளது. இப் புதிய காசநோய் தடுப்புமுறைத் திட்டம் தென்இந்தியாவில் செயற்படுத்தப்பட்டு பெரும் வெற்றிகண்டதாக தெரியவருகிறது. தற்சமயம் உலக சுகாதார இயக்கத்தின் பிரதிநிதிகள் பரீட்சார்த்தமாக வடமேல் மாகாணத்தில் இப் புதிய சிகிச்சை முறையை செயற்படுத்திவருகின்றனர்.

சுகாதார இலாகாவைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தையே அவர்கள் காசநோய் தடை புதிய முறையில் அமுல்நடாத்த தெரிவு செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்பட்டபின்னர் இம்முறை மற்றைய மாகாணங்களுக்கும் பரவலாக்கப்படும் எனத் தெரியவருகிறது.

தற்பொழுது நடைமுறையிலிருக்கும் திட்டப்படி ஒரு காசநோயாளர் ஒரு மாதத்தில் இருமுறை சிகிச்சை நிலையத்திற்கு சென்று மருந்து பெற்றுச்செல்லவேண்டும். டாக்டர்களின் அபிப்பிராயப்படி ஒரு நோயாளி நாளொன்றிற்கு 28 காசநோய் தடுப்பு மாத்திரைகளாகுதல் உட்கொள்ள வேண்டும். ஆனால் மருந்து வகைகளைப் பெற்றுச் செல்லும் காசநோயாளர் இம் மருந்துகளை சரியானமுறையில் உட்கொள்ளாததால் நோய் உரியகாலத்தில் குறைப்படுவதில்லை என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் நடைமுறையிலிருக்கும் திட்டம் பூரணமானமுறையில் நன்மையை நோயாளருக்கு கொடுக்கவில்லை என சுகாதாரப்பகுதியினர் கருதுகின்றனர்.

அடுத்த மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரவிருக்கும் திட்டம் காசநோயாளர்களை யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள காசநோய் தடுப்பு நிலையங்களுக்குச் சென்று இலகுவாக சிகிச்சை பெறக்கூடிய வசதிகளை அளிப்பதாக அமையும். புதியமுறையின் கீழ் ஒரு நோயாளி தனது வசதிக்கேற்றபடி ஒரு நிலையத்திற்கு சென்று சிகிச்சை பெறலாம். குறிக்கப்பட்ட தினங்களில் காசநோயாளர்கள் இவ் நிலையங்களுக்குச் சென்று மருந்தை அவ்விடத்திலேயே உட்கொள்ள வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் மருந்து வகைகள் நோயாளியினால் வீட்டிற்கு எடுத்துச்செல்ல அனுமதியளிக்கப்படமாட்டாது.

இலங்கை தேசிய காசநோய் தடுப்புசங்க தொண்டர்கள் காசநோளர்களின் சிகிச்சைநிலையங்களுக்கு தவருது சென்று மருந்துபெற வேண்டிய அத்தியாவசியத்தை உணர்த்துவார்கள். சிகிச்சைநிலையங்களுக்கு ஒழுங்காக சென்று சிகிச்சை பெறத்தவறும் காசநோயாளருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் பணஉதவியும் நிறுத்தப்படும் எனத் தெரியவருகிறது.

இத் திட்டத்தை பூர்த்தியாக்கிசெயற்படுத்த கடந்த சில வாரங்களாக சுகாதார அதிகாரி டாக்டர் வி. ரி. குணரத்தன, டாக்டர் ஏ. எம். டி. ரிச்சாட்ஸ், டாக்டர் ஜெயசூரியா உட்பட இன்னும்பலர் யாழ்ப்பாணம் விஜயம்செய்திருந்தனர்.

புதிய திட்டப்படி யாழ்ப்பாணக் குடாநாடு ஏழு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

### குறிகாட்டுவான் படகுசேவை

## பிரயா[illegible]ள் அதிருப்தி

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கு மிடையேயான மோட்டார் படகு சேவை ஒழுங்கில்லாததால் இன்று பல பகுதிகளிலிருந்தும் வந்த பிரயாணிகள் பெரிதும் அதிருப்திக்கும் ஏமாற்றத்துக்கு முள்ளானார்கள்.

கிளிநொச்சி, வவுனியா, மாங்குளம்போன்ற தூர இடங்களிலிருந்து வந்தவர்களுக்கு ஒரு தடவைமட்டும் அரசாங்கப்படகான 'இல்லைலபிறே' மோட்டார்ப் படகு குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையில் சேவையில் ஈடுபட்டிருந்ததால் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஏற்கனவே சேவையிலிருந்த மூன்று அரசாங்கப்படகுகள் பழுதடைந்தமையைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

## சினிமா நடிகையின் சீற்றம்

இங்கிலாந்து, செப். 5

இங்குள்ள ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்த சினிமா நடிகை பிரிஜெட்பாடோ அளவுக்கு மீறி ஆட்கள் இருப்பதாகக் கூறிக்கொண்டு வெளியேறினர். அந்த ஹோட்டலில் ஒரு அறை வாடகைக்கு எடுத்திருந்த அவர் ஒரு மணி நேரம் தங்கியபின் வெளியேறினர். ஆனால் ஹோட்டல் நிர்வாகிகள் முழு வாடகையும்வசூலித்துக்கொண்டு தான் விட்டார்கள்.

ஸ்கொட்லாந்தில் ஒரு படப்பிடிப்பில் கலந்துகொள்வதற்காக இரண்டு பெண்கள் சகிதம் இந்தப் பிரஞ்சு நடிகை செல்கின்றார்.

பி. டி. ஐ.

## கல்வி இலாகா முயல்கிறது!

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு போதியளவு இடவசதியின்மையால் பக்கத்திலுள்ள காணியையும் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை யாழ்ப்பாணம் கல்வி இலாகா மேற்கொண்டுள்ளது. இந்தப் பாடசாலைக்கான ஒருவிளையாட்டு இடமும் விரைவில் அமைக்கப்படும்.

## காரைக் கொண்டுவருக

### நீதிபதி உத்தரவு

சாவகச்சேரி, ஞாயிறு

தச்சன் தோப்பு இரட்டைக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளின் மோட்டார்காரை இம் மாதம் 5-ம் திகதி கொண்டுவரத்தவறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி மாஜிஸ்திரேட், செல்லையா என்பவரை எச்சரிக்கை செய்தார். இவர் இக்காரைப் பிணையெடுத்தார்.

## மந்திரி 'திரு' அழைப்பை ஏற்றார்!

புத்தளம், திங்கள்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்துக்கு புத்தளம் நகரசபைத் தலைவர் திரு. மொகமது காதர் புத்தளம் மின்சார விநியோகத் திட்டத்தில் 'லக்ஷபான மின்சாரத்தை' விநியோகிக்கும் அங்குரார்ப்பண விழாவை ஆரம்பித்து வைக்கும்படி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்.

## வியட்னும் பிரச்சினை

லண்டன், செப். 5

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் வியட்னும் பிரச்சினையும் விவாதிக்கப்படுவதை தாம் விரும்புவதாக சிங்கப்பூர் பிரதம மந்திரி திரு. லிகுவான் இவ்வு கருத்து வெளியிட்டிருக்கின்றார்.


REGAL—JAFFNA

NOW SHOWING

RICHARD HARRIS

in

This Sporting Life

(Adults Only)



மகாத்மா தியேட்டர்

(நெல்லியடி)

தினசரி 6-30—9-30

Winners of the West

(Full Serial)

(சீரியல்)



நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

நாகேஸ்வரராவ்-அஞ்சலி தேவி

நடித்த

மாதர்குலமாணிக்கம்



ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

போயா தினங்களில் 4 காட்சிகள்

ராமராவ் - அஞ்சலிதேவி

நடித்த

அன்புவடிவம்


## விமானம் நொறுங்கி 4 பேர் மரணம்

பம்பாய், செப். 6

இந்திய எயார்லைன் கோர்ப்பரேஷனைச் சேர்ந்த ஒரு விமானம் சாந்தா குரூஸ் விமானநிலையத்துக்கருகில் மலைப்பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகி நொறுங்கியது. அதில் பிரயாணம் செய்த 4 பேரில் ஒருவரும் உயிர் பிழைக்கவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும், விமானநிலையத்திலிருந்து கிளம்பிய 15 நிமிடங்களில் விபத்துக்குள்ளானதாகவும் தெரிகின்றது. (பி. டி. ஐ.)

## ரயில் விபத்தில் 5 பேர் மரணம்

டோர்லன் (பிரான்ஸ்)

தடம்புரண்டுகிடந்த ஒரு எக்ஸ்பிரஸ் மெயில்வண்டியின் மேல் பிராயாணிகள் வண்டி ஒன்று மோதியதன் காரணமாக குறைந்தது 5 பேர் மாண்டதாகவும் 15 பேர் காயமுற்றிருக்கலாம் என்று இங்கு கருதப்படுகின்றது.

## அணுகப்பல் விஜயத்துக்கு ஆட்சேபம்

டோக்கியோ, செப். 6

டோக்கியோவுக்கு அருகில் உள்ள அமெரிக்க கடற்தளத்தின் முன்வாசலில் ஒரு ஜப்பானியர் கத்தியால் வயிற்றை அறுத்து தற்கொலை செய்துகொள்ள முயற்சிசெய்தார்.

'சீ டிராகன்' என்ற அமெரிக்க அணு ஆயுதபாணியான நீர்மூழ்கிக் கப்பல் சமீபத்தில் இந்தத் துறைமுகத்துக்கு விஜயம்செய் [illegible] தற்கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.


துர்க்கந்தத்தைப் போக்கி

தூய்மையான சுகந்த நறுமணத்தைப் பரப்பி

மனோரம்மியம் ஊட்டுவது

99 ஜவ்வாது பத்திகளே!

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

உங்கள் வாடிக்கையாளர்களிடம்

"99 ஜவ்வாது பத்திகள்"

என்று கேட்டு வாங்க மறவாதீர்கள்!

ஏகவிநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை யாழ்ப்பாணம்.
போன்: 541
Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு.



இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருமலை)

மொடேர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி - எஸ்.எஸ்.ஆர்.

பாலையா, ராதா, முத்துராமன், ஸ்ரீராம், நாகேஷ், தேவிகா, புஷ்பலதா

மற்றும் பலர் நடிக்கும்

பாரத மாதா பிக்சர்ஸ்

பழநி

இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி

திரைக்கதை - டைரக்ஷன்: பீம்சிங்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாடு

# ரொடீஷிய பிரச்னையை முதலில் விவாதிக்க சம்மதம்

## வெளியேறப்போவதாக சாம்பியா பயமுறுத்தல்

### ஆபிரிக்க நாடுகளின் கருத்தை இந்தியா ஆதரிக்கின்றது

லண்டன், செப்டம்பர் 6

இன்று ஆரம்பமாகும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் ரொடீஷியா பற்றிய பிரச்னையே முதலில் விவாதிக்கப்படவேண்டும் என்று இந்தியா தெரிவித்த கருத்தை எல்லா அங்கத்துவநாடுகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளன

ரொடிஷியப்பிரச்னை விவாதிக்கப்படுகையில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் மகாநாட்டுக்கு தலைமைவகிக்க மாட்டார் என்று கருதப்படுகின்றது. ரொடீஷியா பிரச்னையில் பலாத்காரம் பிரயோகிக்கக்கூடாது என்ற நிலைமையே பிரிட்டன் இன்னும் கடைப்பிடிப்பதாகக் கருதப்படுகின்றது.

**ஸாம்பியா**

ரொடீஷிய விஷயத்தில் தீவிரமான நடவடிக்கை எடுப்பதற்கான ஸாம்பியாவின் யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிடில் காமன்வெல்திலிருந்துவெளியேறிவிடப்போவதாக ஸாம்பியா அறிவித்திருக்கின்றது. ஸாம்பிய பிரதமர் திரு. கவுண்டா மகாநாட்டில் கலந்து கொள்ளவரவில்லை.

பிரிட்டிஷ் பிரதமர் மகாநாட்டை ஆரம்பித்துவைத்து அவரவேற்புரை நிகழ்த்தியவுடன் ரொடீஷிய பிரச்னை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கருதப்படுகின்றது.

**இலங்கை**

இலங்கை பிரதமரின் பிரதிநிதியாக காமன்வெல்த் மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் இலங்கை நீதி மந்திரி திரு. ஏ. எவ். விஜயமான நேற்று லண்டன்வந்து சேர்ந்தார். அவர் நிருபர்களிடம்பேசியபோது ரொடீஷியா விஷயத்தை அடிப்படையாகவைத்து இலங்கை காமன்வெல்திலிருந்து வெளியேறும் நோக்கம் இல்லையென்று கூறினார்.

**இந்தியா**

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. சுவர்ண்சிங் லண்டனில் நிருபர்களிடம் பேசியபோது ரொடீஷியா விஷயத்தில் ஏனைய ஆபிரிக்க நாடுகளைப்போன்றதே இந்தியாவின் கருத்தும் என்று கூறினார், ரொடீஷிய பிரச்னை குறித்து ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நிர்ப்பந்த நடவடிக்கைகள் பலன் தரவில்லை அதனால்வன்முறை பிரயோகிக்கப்படுவதில் இந்தியாவுக்கு ஆட்சேபனை கிடையாது என்று சர்தார் சுவர்ண்சிங் கூறினார்.

இந்தியா அணு ஆயுதம் உற்பத்திசெய்வதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியிருப்பது ஆதாரமற்றது என்று இந்திய வெளிநாட்டு மந்திரி கூறினார். இந்த மாதிரி பிரச்னைகள் குறித்து விசாரணை நடத்தும் அல்லது ஆராய்ச்சிகள் செய்யும் ஸ்தாபனமாக காமன்வெல்த் மாறுவதை நாம் விரும்பவில்லை. அதற்கு வேறு சர்வதேச ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

**கனடா**

ரொடீஷிய பிரச்னையை ஐ. நா. வுக்குகொண்டுபோக வேண்டிய அவசியமில்லை அதை காமன்வெல்த் மகாநாட்டிலேயே விவாதித்து தீர்வுகாண்பதுதான் உசிதமானதாகவிருக்கும் என்று கனடா பிரதம மந்திரி திரு. பியர்ஸன் இங்கு கூறியுள்ளார். காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் இங்குவந்துள்ளார்.

## பசு வதையை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, செப். 6

பசு வதையை எதிர்த்து நேற்று பார்லிமெண்ட் கட்டிடத்தின் முன்னால் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம்செய்தார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் மதத்தலைவர்களும் சாதுக்களும் கலந்துகொண்டனர்.

செங்கோட்டையிலிருந்து அவர்கள் பக்திப்பாடல்களைப் பாடிக்கொண்டு மேளங்களை, சங்குகளை முழக்கியபடி 3 மைல்தூரம் ஊர்வலமாக வந்தார்கள். மஞ்சள் நிறத்திலும், வெள்ளை நிறத்திலுமான கொடிகளை அவர்கள் தம்முடன் கொண்டுசென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் இந்துக்கள், சீக்கியர், பௌத்தர்கள், ஜெயின் மதத்தவர்கள் கலந்து கொண்டனர். (பி டி ஐ)

## இந்தோ-இந்திய உறவு

புதுடில்லி, செப். 6

இந்தோனேஷியாவின் இந்தியாவுடனான தொடர்புகள் நேசமான முறையில் அமைக்கப்படுமென்று இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி திரு. ஆதம்மாலிக் இங்கு அறிவித்தார்.

சீனு முதற்கொண்டு எல்லா நாடுகளுடனும் இந்தோனேஷியா நட்பையே விரும்புகிறது. ஆனால் உள்நாட்டில் நிர்ப்பந்தநிலைமைகளை வெளிநாடுகள் ஏற்படுத்துவதைச் சகிக்கமுடியாதென்றும் திரு. மாலிக் கூறினார்.

காஷ்மீர் பிரச்னை பற்றி நிருபர்கள் கேட்டபோது அந்தப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்காக டாஷ்கண்ட் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளதென்று கூறினார்.

## சிங்கப்பூர்

புதுடில்லி, செப். 6

சிங்கப்பூரிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறிய பின்னர் மலேஷியா சம்மதித்தாலுகூட அந்தத் தளங்களைச் சிங்கப்பூர் ஏற்றுநடத்தமுடியாதென்று சிங்கப்பூர் வெளிநாட்டு மந்திரி திரு. ராஜரத்தினம் இங்கு கூறினார்.

சிங்கப்பூர் தனது அண்டை நாடுகளுடன் சமாதானமாக உறவை வைத்துக்கொள்ளவே விரும்புகிறதென்று திரு. ராஜரத்தினம் குறிப்பிட்டார்.

## பாக். படை குவிப்பு

புதுடில்லி, செப். 6

இந்திய எல்லைகளில் பாகிஸ்தான் துருப்புகளைக் குவித்துவருவது சம்பந்தமாக[illegible]பிரதமர் இந்திரா காந்தி எகிப்திய ஜனாதிபதி நாஸருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

## யுகோ. கம்யூனிஸ்ட் கட்சி

பெல்கிரேட், செப் 6

யுகோஸ்லேவிய கம்யூனிஸ்ட்கட்சி முழுவதுமாக திருத்தி அமைக்கப்படும் என்று யுகோ. அதிபர் மார்சல் டிட்டோ நேற்றுக் கூறினார்.

மக்களின் விருப்பத்தின் பேரிலேயே இம்மாறுதல்கள் செய்யப்படவிருக்கின்றன என்றும் அதிபர் டிட்டோ கூறினார்

## புரட்சியாளரை எதிர்த்து மாணவர்கள் புரட்சி

### சீனாவில்செங்காவலருக்கு எதிர்ப்புவலுக்கிறது

ஹொங்கொங், செப். 6

சீனாவில் செங்காவலர் இயக்கம் மேலும் தீவிரமான எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளது.

கலாசார புரட்சி இயக்கம் என்று கூறப்படும் வாலிபர்களின் இந்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளுக்கு சீன அரசாங்கம் பூரண ஆதரவு அளித்துவருகின்றது. இதன் பின்னணியில் பிரதமர் சூ-என்-லாய் ஆலோசகராக விளங்குவதாகக் கருதப்படுகின்றது.

செங்காவலர் இயக்கத்தினருக்கு மாணவர்கள் மத்தியிலேயே அதிக எதிர்ப்பு உருவாகியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

சென்சின் பல்கலைக்கழகத்தில் செங்காவலர் இயக்கத்தினரை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். இங்கு ஏற்பட்ட ஒரு சம்பவத்தில் ஏராள மாணவர்கள் காயமடைந்துள்ளனர். வேறொரு பல்கலைக்கழகத்தில் 300 மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் ஸ்ரீமுங் பல்கலைக்கழகத்திலும் மாணவர்களுக்கும் செங்காவலர் இயக்கத்தினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

செங்காவலர் இயக்கத்தினர் வெளிநாட்டுதூதரகங்கள் பலவற்றின் முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளதின் காரணமாக போலந்து, யுகோஸ்லேவிய நாடுகள் தங்கள் தூதர்களைத் திருப்பி அழைக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

இந்த இயக்கம் ரஷ்ய தூதராலயம் முன்னால் செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்றைத் தொடர்ந்து பல இடங்களிலும் பரவியது. ரஷ்ய தூதரகம் உள்ள தெருவுக்கு திரிபுவாதிகள் எதிர்ப்பு தெரு என்று அவர்கள் பெயர் வைத்துள்ளனர்.

## அழகிய பெண்தான் வழிநடத்துகிறார்!

அவுமடின் (நியுஸிலாந்து) செப்டம்பர் 6

சீனாவில் நடைபெற்றுவரும் செங்காவலரின் கலாசாரப் புரட்சியை ஒரு கவர்ச்சிமிக்க அழகி முன்நின்று நடத்துவதாக இங்கு வந்துள்ள வர்த்தகர் ஒருவர் கூறினார்.

வியாபாரவிஷயமாக சீனாவின் பல்வேறு நகரங்களுக்கும் விஜயம்செய்துவிட்டுத் திரும்பியுள்ள இந்த வர்த்தகர் அனேகமாக ஒவ்வொரு நகரிலும் செங்காவலர்கள் என்றழைக்கப்படும் 13 வயதுக்கும் 15 வயதுக்குமுட்பட்ட இந்த இளைஞர்கள் இரவுபகலாக மேளங்களையும், கோஷங்களையும் முழக்கியபடி இருக்கிறார்கள் என்று கூறினார். இவர்களை பொதுவாக முன்னடத்திசெல்பவர் அழகிய கட்டுமஸ்தான கவர்ச்சியான பெண்மணியாகவே இருக்கின்றார் என்றும் அந்த வர்த்தகர் கூறினார். (பி. டி. ஐ.)

# தென் வியட்னாமில் இருந்து அமெரிக்கா வெளியேறத் தயார்!

## ஆனால் வட வியட்னாமும் அப்படி செய்ய முன்வருமா?

### அதிபர் ஜோன்ஸன் கேள்வி

வாஷிங்டன், செப்டம்பர்

வடவியட்னாமும் அதன் துருப்புகளை தென்வியட்னாமில் இருந்து வாபஸ்பெற்றுக்கொள்ள இணங்குமானால் அமெரிக்காவும் அதன் துருப்புகளை தென்வியட்னாமிலிருந்து வெளியேற்றிக்கொள்வதற்கான ஒரு கால அட்டவணையை நிர்ணயிக்கத் தாம் தயாராய் இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் அறிவித்திருக்கின்றார்.

ஓகியோ மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டுள்ள அதிபர் ஜோன்ஸன் ஒரு கூட்டத்தில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அமெரிக்கா ஐரோப்பாவில் இருக்கும் அதன் துருப்புக்கள் எல்லாவற்றையும் வாபஸ் பெற்றுக்கொள்ள விரும்புகின்றது, ஆனால் இந்த விஷயம் இறுதியாக வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளாலேயே முடிவு செய்யப்படவேண்டுமென்று அதிபர் ஜோன்ஸன் குறிப்பிட்டார். வியட்னாமில் இப்போது பலாத்காரம் தலைதூக்கியிருக்கின்றது. அங்கு பலாத்காரம் முடிவுற்றதும் அமெரிக்கத் துருப்புக்கள் படிப்படியாக வாபஸ் பெறப்படும் என்று திரு. ஜோன்ஸன் கூறினார்.

ஆசிய நிலைமைகள் பற்றி அதிபர் குறிப்பிடுகையில், சீனு என்றோ ஒரு தினம் அமெரிக்காவை நேரே சந்தித்துப் பேச இணங்குமென்றும், ஆசியாவில் மிகப் பெரிய வல்லரசு என்ற அதன் உரிய இடத்தை சமாதான முறையில் அடையுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

**வியட்னாமில்**

இதற்கிடையில் வியட்னாமில் ஹானோய் பிரதேசத்தில் அமெரிக்கப் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வியட்காங் துருப்புகள் ஒளித்திருக்கும் இடங்களை வேவுபார்த்து தகர்ப்பதில் அமெரிக்க விமானங்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக கருதப்படுகின்றது. நேற்று அரசாங்கத் துருப்புகளுக்கும் வியட் காங்படையினருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் அரசாங்கத்துருப்புகள் பல வெற்றிகள் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முனிவாக்கு

உலகத்திலேயே மிக மிக சக்தி வாய்ந்தது உண்மை அன்பு தான். இறைவனின் திருநாமத்தால் ஆகமுடியாதது ஒன்றுமில்லை. வெறும் ஆவேசம் தெய்வ பக்தி ஆகாது. பக்தியென்பது பரிபூரண அன்பு தான்.

—சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 589

உ ஜயவிளம்பி பராபவ ஆண்டு ஆவணி மீ 22 உ (7-9-66)


## மாவட்டசபைகள்

வருகிறது, வருகிறது என முன்னைய அரசாங்கங்கள் தொடக்கம் இன்றைய அரசாங்கம் வரை பல தடவைகளிலும் அறிவித்து வந்த மாவட்ட சபைகள் மசோதா தயாராகிவிட்டது. அநேகமாக அது அடுத்தமாதம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேறிவிடும் என எதிர்பார்க்கலாம்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா ஸ்தலஸ்தாபன சபைகளின் தந்தை என போற்றப்பட்டார். மத்திய அரசாங்கத்தின் சகல அதிகாரங்களும் குவிந்து இடக்காமல், ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கி, நாட்டின் நிர்வாகத்தை பரவலாக்கி மக்களிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும் என்பதே திரு. பண்டாரநாயகாவின் [illegible]ய மாக இருந்தது. இந்த அடிப்படையில் தான் பிரதேச சபைகள் அமைக்க திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார் அந்த ஒப்பந்தம் சிதைந்துபோன போதும் பிரதேசசபைகள் அமைக்கும் நோக்கத்தை அவர் கைவிடவில்லை. திருமதி பண்டாரநாயகாவின் அரசாங்கமும் அந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டது. பிரதேச சபைகள் என்பதற்குப் பதில் 'மாவட்ட சபைகள்' எனப் பெயரை மட்டும் மாற்றிக்கொண்டது. அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமான சிம்மாசனப் பிரசங்கங்களில் திருமதி சிறிமா அரசாங்கமும் இன்றைய தேசிய அரசாங்கமும் 'மாவட்ட சபைகள்' அமைக்கப்படும் எனத் தெளிவாகத் தெரிவித்திருந்தன.

மாவட்ட சபைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமோ தமிழ் மக்களுக்கெனத் தனியாகவோ கொண்டு வரப்படவில்லை. நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி, மக்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு வழங்க, பழைய அந்நிய ராட்சிக்கால நிர்வாக முறையை மாற்றுவதற்கு நாடு முழுவதிலும் மாவட்ட சபைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

எனவே நாட்டின் நன்மைக்குரிய ஒரு நல்ல திட்டத்தை கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரியொன்று அபாயச்சங்கு ஊதத் தொடங்கியுள்ளது போல, எதையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்போரும்கூட இதை வகுப்புவாதக் கண்கொண்டு நோக்குவது நாட்டுக்கு நன்மை பயக்காது.

## ஒரு முக்கிய நிகழ்ச்சி

நல்லூரிலே நேற்றுக் காலை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கிளை ஸ்தாபிக்கப்பட்டது. ஈழத்து சைவ சரித்திரத்தில் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும் இன்று சைவம் முதலிய சமய பாடங்கள் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படினும், இவை பெரிதும் போதனை அளவில் இருக்கின்றனவேயன்றி சாதனையில் இல்லை.

அன்பேசிவம்என்று ஒருபுறம் கூறிக்கொண்டு, அன்பற்ற பல காரியங்கள் நடப்பதால், சைவர்களிலேயெசிறப்பாக வாலிபர்களில் பெரும்பாலோருக்கு, சைவத்தில் உண்மை நம்பிக்கையில்லை. நாத்திகமே அதிகமாக வாலிப உலகில் வளர்ந்து வருகிறதென்று கூறின் அது மிகையாகாது.

இந்த அவல நிலைக்கு முக்கிய காரணம், சைவ சமய உண்மைகளை எடுத்துக்கூறவும் அவைதநடைமுறையில் கொண்டுவந்து வழிகாட்டவும், அதிகாரபூர்வமா ஒரு ஸ்தாபனம் இங்கு இல்லாமலிருப்பதுதான் இப்பெருங்குறையை நிறைசெய்ய, தமிழகத்திலே மிகப் புராதனமான மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கிளை ஸ்தாபனம் இங்கு ஏற்பட்டு அதன் தலைவராய் ஈழத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் (பூர்வாசிரமத்தில் ஸ்ரீ மணிபாகவதர்) நியமனம் பெற்றிருப்பது இங்குள்ள சைவ சமூகத்துக்கு விசேஷ நன்மைகள் பயப்பதாக இருக்கவேண்டும்.

இந்த ஸ்தாபனம் மேன்மேலும் பலப்படுவது, சைவ சமூகத்தைப் புனிதப்படுத்தவும், சமூகக் குறைகள் பலவும் நீங்கவும் வழி செய்யும். ஏற்கெனவே மேலான சமயப் பணி செய்து பொது மக்களின் அபிமானத்தை அமோகமாகப்பெற்ற ஒருவர், இக்கிளை ஸ்தாபனத்தின் தலைவராகக்கிடைத்திருப்பது, இதன் எதிர்கால நற்பணிக்கு நல்லதோர் சுபசூசகமாகும்.

## அமெரிக்காவின் புதியகுரல்

தென்வியட்னாமிலிருந்து படிப்படியாகத் தனது துருப்புக்களை அமெரிக்கா விலக்கிக்கொள்ளத் தயாராம். ஆனால்வடக்கு வியட்னாமும் தனது துருப்புகளை அங்கிருந்து விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் தெரிவித்திருக்கிறார். நவசீனாவும் அமெரிக்காவும் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் வருமென எதிர்பார்ப்பதாகவும் அமெரிக்க அதிபர் கருதுகிறார்.

வியட்னாம் பிரச்னையில் அமெரிக்கா தனக்கு என்னதான் கடமையும் பொறுப்பும் இருக்கிறதெனக் கூறிக்கொண்டாலும் அமெரிக்க மக்களினதும் உலக அமைதியை விரும்பும் மக்களினதும் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு, ஆழந்தெரியாமல் காலைவிட்டு, அதிலிருந்து கெளரவமாக வெளியேறுவதெப்படி என்ற நிலையில் இருக்கிறது. இதனால்தான் அமெரிக்காவின் சுருதி இப்பொழுது இறங்கி வருகிறது என்றாலும் அமெரிக்க துருப்புக்களைவாபஸ் பெறுவதற்கு விதித்துள்ள நிபந்தனைக்கு முன் வடவியட்னாம்மீது குண்டுவீசுவதை நிறுத்திக் கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். எனினும் குண்டுவீசுவதை நிறுத்த இனியாவது உத்தரவிட்டு படைகளைப் படிப்படியாக திரும்பப்பெற முன்வர வேண்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை வடவியட்னாமும் பயன்படுத்திக் கொள்வது நல்லது. அமெரிக்காவிடம் தவறிருப்பினும் அதைத் திருத்திக் கொள்ள முன்வந்துநேசக்கரம் நீட்டும் பொழுது அதற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க சீனாவும் வடவியட்னாமும் முன்வர வேண்டும்! [illegible] இறது.

# ஐயாறன் எழுதுவது

மணிபாகவதர், மதுரை ஆதீனத்திடம் காஷாயம் பெற்றது சரியா? சாதியில் அந்தணரான ஒருவர் ஸ்ரீசங்கராச்சாரியாரிடமல்லவா உபதேசம் பெற வேண்டும். என்று சில வட்டாரங்களில் பேசப்படுவதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும்பிலும்கூட இது என் காதில் விழுந்தது.

இச் சந்தேகத்துக்கு ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் நேற்று நல்லூரிலே ஆதீனக் கிளை திறப்புவிழாவில் பேசுகையில் தக்கபதிலளித்தார்.

''கஷாயம் வாங்குமுன் முதலில் பூணூலையும், பிறகு சிகையையும் அகற்றுகின்றார்கள். பூணூல் ஒரு சாதிக்கான சின்னம் அதை அகற்றியபின் சாதிப்பற்றுகள் நீங்கிவிடுகின்றன. அதன் பிறகே துறவு பூண வேண்டுமாதலால், துறவில் சாதிக்கு இடமே இல்லை.

''ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும், தியானம் செய்கையில், பூணூலைக் கழற்றி வைத்துவிடுவாராம் ஏன்? அது ஒரு சாதிச் சின்னமாக இருந்து, சாதிப்பற்றுகளையும், செருக்கையும் அளிக்கக் கூடுமென்று, அதை அவர் முதலில் அகற்றியே பின்னர் தியானத்தில் அமர்வாராம்'' என்று கூறி மேலும் சில விளக்கம் தந்தார்.

ஃ ஃ ஃ

சுந்தரமூர்த்தி நாயனார் அந்தண மரபில் பிறந்தவர். ஓர் அந்தணர், மற்றொரு அந்தணருக்கு அடிமைப்படுவதுண்டோ என்று சாதி எண்ணம் கொண்டு வயோதிப வேதியராக வந்தவரிடம் வாதித்தவர். ஆனால் அவர் தடுத்தாட்கொள்ளப்பட்ட பின்னர் திருத்தொண்டர் தொகையில் கூறுவது என்ன?

''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்குமடியேன்'' என்று மனம் மாறினார். அந்தணருக்கு மட்டுமல்ல, ''திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்'' என்று கூறி, சாதி உயர்வு தாழ்வு எண்ணங்கள் தமக்குச் சிறிதுமில்லை என்று தெளிவுபடுத்திவிட்டார்.

பக்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன், பரமனையே பாடுவார்தம் அடியார்க்குமடியேன், அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்குமடியேன்...... என்று தொகையடியார்களைக் குறிப்பிட்டுள்ளார். இறைவனுடைய அடியவராக ஒருவர் ஆகிவிட்டபின், அவருக்கு சாதி முதலிய உயர்வு தாழ்வு, வேற்றுமை எண்ணங்கள் இருக்க முடியாதென்பதையும் இதன்மூலம் தெரிவித்துவிட்டார். ஆகவே இவ்விஷயத்தில் சாதி வேற்றுமையைப் பற்றிப் பேசுவது சரியாகுமா?

ஃ ஃ ஃ

''அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய் ஆவுரித்துத்தின்றுழலும்புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே'' என்று, சைவ சமய குரவரான திருநாவுக்கரசு நாயனார் கூறியதை சற்றேநினைவுபடுத்திக்கொண்டால், சாதி பற்றிய வீண் விவாதங்கள் இவ்விஷயத்தில் எழுவதற்கில்லை.

மேலும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அந்தண மரபில் பிறந்தவர், அவர் வேளாளர் குலத்தில் பிறந்த திருநாவுக்கரசரை வணங்கியதாயும், அந்தணரான அப்பூதி அடிகளும், திருநாவுக்கரசரை வணங்கியதாயும் பெரிய புராணம் கூறுகின்றது. ஆகவே இவ்விதவிஷயங்களில் சாதி வேற்றுமைகளைக் கிளப்பி, விணுக்குழப்பிவிடாமல், வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், அவைவளர்த்து மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க முற்படுவதே சைவர்களின் மேலான கடமையல்லவா?

ஃ ஃ ஃ

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக், காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர்கள்வன், ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள் செய்த, பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானி வனன்றே.

—திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

## முன்னேறிவரும் பிரேஸில்

பிரேஸிலின் தேசிய தினம் இன்று கொண்டாடப்படுகிறது. பிரேஸில் நாடு பற்றிய விபரம் இங்கே தரப்படுகின்றது.

ஜனத்தொகையிலும் நிலப்பரப்பிலும், தென் அமெரிக்காவில் மிகப் பெரிய நாடாக விளங்கும் பிரேஸில் கடந்த பத்து ஆண்டுகளில் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றது. பிரேஸிலின் தலைநகரம் முன்னர் றியோடிஜெனிரோவாகும். 1960ம் ஆண்டு ஏப்ரலில் இந்நாட்டின் தலைநகர் பிரேஸிலியாவாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த நாட்டின் ஜனத்தொகை: 8 கோடி. நிலப்பரப்பு: 32,86,270 சதுர மைல்.

1500ம் ஆண்டில் ஸ்பானிஷ் தேசத்தவர் இந்த நாட்டைக் கண்டுபிடித்த பொழுதிலும் ஒரு போர்த்துக்கேயக் கடல்பிரயாணியே இதனை உண்மையில் கண்டுபிடித்தார். இதனைத் தொடர்ந்து 1807ம் ஆண்டு வரை இந்த நாடு போர்த்துக்கேயகாலனியிலிருந்தது. பின்னர் 1882ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ந் தேதி சுதந்திரமடைந்து 1889ல் குடியரசானது.

பிரேஸிலில் சிலதடவைகள் இராணுவப் புரட்சிகள் ஏற்பட்டுத் தலைமைப்பீடங்கள் மாறியிருக்கின்றன. கடைசியாக 1964ல் அதிபராகப் பதவியேற்ற ஜெனரல் ஹம்பர்ட்டோ காஸ்டெலோ பிருங்கோ 1967ம் ஆண்டு மார்ச் மாதம்வரை தொடர்ந்து பதவியிலிருக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. பிரேஸில் ஐ. நா.வின் ஒரு உறுப்பு நாடு.

பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் உலோக தாதுப்பொருள்கள் இங்கு மலிந்து காணப்படுகின்றன. ஆனால் இதில் நாடு அதிக முன்னேற்ற மடையவில்லை. மாங்கனீஸ தாதுப்பொருள்

(5-ம் பக்கம் பார்க்க)

# நல்லூரில் மதுரை ஆதீனக் கிளை

யாழ்ப்பாணம், புதன்

மதுரை ஆதீனம் சென்று மகாசந்நிதானத்தில் துறவு பூண்டு வந்துள்ள ஸ்ரீ லஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இன்று காலை 8 மணிக்கு நல்லூரில் மதுரை ஆதீனத்தின் கிளையாக நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தை திருமுறை இசை முழங்க தேவார பாராயணத்துடன் ஆரம்பித்து வைத்தார்.

திரு. கே. பி. ஹரன் ஆதீனத்தின் சம்பிதராயம்பற்றியும், மதுரை ஆதீன அடிப்படையில் இவ்வாதீனம் தொண்டாற்ற முன்வந்திருப்பது யாழ்ப்பாணத்தில் சைவத்திற்குஒரு மறுமலர்ச்சியென்றும் கூறினார்,

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான்பேசுகையில், மதுரை ஆதீன மகாசந்நிதானம் தமக்கு அனுப்பியுள்ள ஆசியுரையில் குறிப்பிட்ட எல்லா ஆணைகளையும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுப்பதாகவும், நல்லூர் ஆதீனத்தின் வருங்காலத் திட்டங்கள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

திரு. க. தி. சம்பந்தன் பேசுகையில், திருஞானசம்பந்தசுவாமிகள், மங்கையர்க்கரசி அம்மையார் போன்றோர் செய்த தொண்டுகளை அடுத்து ஆறுமுகநாவலர் அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்த தொண்டைப்போல இப்போது ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் செய்துவருகிறாரென்றார்.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம், திரு. சோதிநாதன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றது. இதனையடுத்து நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தின் வெளியீடான 'அருளமுதம்" சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

ஆதீனவித்துவான், நாதஸ்வரக் கலாநிதி திரு. என். கே. பத்மநாதன், இசைப்புலவர் என். சண்முகரத்தினம், கதாகாலட்சேபமணி திரு. த. பொன்னம்பலம், சித்திரக் கலைஞர் மணியம் ஆகியோரை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனம் கௌரவிக்கவிருக்கிறது.

---

பீகிங், செப். 5

செங்காவலர் நேற்றுபீகிங்கிலுள்ள புத்தகக்கடையொன்றுக்குள் நுழைந்து கலாச்சாரப் புரட்சியின் ஒரு அம்சமாக 40,000புத்தகங்களை எடுத்துச்சென்று தீயிட்டதாகச் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ஆஸ்பத்திரியில்

# கர்ப்பிணிகள் சிகிச்சைபெருது வீடு திரும்புகின்றனர்

## மருந்து இல்லையென கைவிரிப்பு

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாடு நோயாளிகள் மத்தியில் பெரும் கஷ்டத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பிரசவ மனை நிலையத்திற்குச்செல்லும் கர்ப்பிணிகள் இம் மருந்துத்தட்டுப்பாட்டினல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. பொதுவாக வெளியூர்களில் இருந்து சிகிச்சை பெறவரும் கர்ப்பிணிகள் சிகிச்சை பெறமுடியாது ஏமாற்றத்துடன் வீடு செல்கின்றனராம். அண்மையில் கிளிநொச்சிப்பகுதியிலிருந்து சிகிச்சைபெற யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரிக்கு வந்த கர்ப்பிணியொருவர் மிகவும் பரிதாப நிலைக்குள்ளாகி மருந்து பெருது வீடு திரும்பியதாகத் தெரியவருகிறது. வெளியூர்களிலிருந்து வரும் கர்ப்பிணிகளை தனியார் சிகிச்சைநிலையங்களுக்கு ஏன் சென்று சிகிச்சை பெறக்கூடாதென பொறுப்புவாய்ந்த வைத்தியஅதிகாரிகள் கேட்கின்றனராம். இதுசம்பந்தமாக பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

# "சமஷ்டி அமைச்சர் கையாளுகிருர்; கவனம்!"

## மாவட்டசபை மசோதா பற்றி ஆங்கிலத்தினசரி அபாயச்சங்கு

'மாவட்ட சபைகள்' என்ற தலைப்பில் கொழும்பிலிருந்து வெளியாகும் 'சன்' என்ற ஆங்கிலத் தினசரி சென்ற 5-ந் திகதி எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தில் "சமஷ்டிஆட்சி அமைப்பை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட சமஷ்டிக் கட்சியின் வற்புறுத்தலிமீது மாவட்டசபை மசோதா கொண்டுவரப்படுகின்றது" என்றும் மாவட்டசபை விஷயம் 'சமஷ்டி' அமைச்சரால் கையாளப் படுகிறதென்றும் இதில் அரசாங்கம் மிகக்கவனமாக இருக்கவேண்டுமென்றும் கூறுகிறது.

"சுயாதீனப்பத்திரிகை ஸ்தாபனத்தினல்" வெளியிடப்படும் 'சன்' பத்திரிகையின் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தைத் திறமையாகச் செயற்படுத்தவும் மக்களிடம் ஒற்றுமையை ஒருமுகப்படுத்தவும் அரசாங்கம் மாவட்டசபைகளை உருவாக்கத்தீர்மானித்துள்ளது.

சென்ற சனிக்கிழமை ஸ்தலஸ்தாபன மந்திரியினல் உத்தேசிக்கப்பட்ட மாவட்டசபையின் நகல் மசோதாவொன்றை நாம் வெளியிட்டிருந்தோம். இந்த மாவட்ட சபைகளை உருவாக்கவேண்டுமென்ற கெடுபிடி தமிழரசுக்கட்சியிடமிருந்தே வந்திருக்கின்றது. இக்கட்சியின் நோக்கம் இந்த நாட்டிலே ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவுவதேயாகும். அண்மையில் மாவிட்டபுரத்தில்நடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிபர் மகாநாட்டிலும் இக்கொள்கை வலுப்படுத்தப்பட்டதுடன் சமஷ்டி ஆட்சியை ஸ்தாபிக்கத் திடசங்கற்பம் செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களின் பிரதிநிதியான மந்திரி திரு. எம். திருச்செல்வத்தின் கொள்கைகளைப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் சந்தேகக் கண்ணுடன் நோக்குவார்கள் என்பது திண்ணம். சமஷ்டிக் கொள்கை காணி, நியோகம், அபிவிருத்தி, குடியேற்றம் முதலியவற்றுடன் பின்னிப்பிணைக்கப்பட்டதொன்ருயிருப்பதால் அரசாங்கம் முடிக்குரிய காணிகளை உத்தேசிக்கப்பட்ட மாவட்ட சபைகளின் அதிகாரத்தின்கீழ் கையளிப்பதில் விழிப்பாக இருக்கவேண்டும். மாவட்டசபைத் திட்டத்தின் கீழ்முடிக்குரிய காணிகளை கமக்காரர்களுக்கு நியோகம் செய்தல், குத்தகைக்குக் கொடுத்தல் போன்ற கொள்கைகளைச் சிங்களப் பெரும்பான்மை மக்கள் எதிர்ப்பார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் இன்று சீர்கெட்டுப் பல குறைபாடுகளுடன் இருக்கின்றது. நிர்வாகச் சீர்கேடு, லஞ்சஊழல் திறமையின்மை ஆகியன இன்றைய உள்ளூராட்சி மன்றங்களிடம் குடிபுகுந்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் தற்பொழுது பிராந்திய அடிப்படையில் இயங்கி வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பூரண சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டுமா?

நிதிநிலைமையை சமாளிக்க முடியாத உள்ளூராட்சி மன்றங்கள் முக்கிய செலவினங்களுக்குக் கடனுதவி பெறுவதாயிருந்தால் இச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு அதிகாரம் பெறமுடியும்?

உத்தேசிக்கப்பட்ட மாவட்ட சபை நிர்வாகம் மந்திரி திரு. திருச்செல்வத்தின் பாணியில் அந்தந்த மாவட்ட சபைகளினலேயே தீர்மானிக்கப்பட்டு மொழிச் சட்டத்திற்குக்குந்தகம் விளைவிக்கக்கூடாத முறையில் நடாத்தப்படும். இது தவிர்க்கமுடியாததொன்ருகும். ஆனல் மாவட்ட உள்ளூர் ஆட்சி நிர்வாகத் தொடர்புகள் உத்தியோக மொழியிலேயே நடாத்தப்படவேண்டும். தமிழில் நடாத்தப்படக்கூடாது. அப்படியில்லாவிடின் உத்தியோக மொழிச் சட்டத்தின் கருத்தே சிதைந்துவிடும்.

கீழ்ப்பிரிவுக் கல்வி கனிஷ்ட தொழிற்கல்வி முதலியவற்றை உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தின்கீழ் கையளிப்பதை யிட்டுப் பெரும் பிரச்னை எழும். தேசிய கல்வியைப் போதிப்பதற்கென்ற முறையிலேயே கல்வித் திட்டங்கள் அந்நாட்டிலே கடந்த பத்து ஆண்டுகளாக உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்ததென்பதை அரசாங்கம் மறந்துவிடலாகாது.

மாவட்டசபைகள் பற்றிய விவகாரம் பயங்கரமான முறையில் ஒரு 'தமிழரசுக் கட்சி மந்திரி'யினல் கையாளப்படுவதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். தேசிய அரசாங்கம் இவ்விஷயத்தில் மிகவும் அதிக கவனத்துடனும் பெறுமதியுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

## எதிரி விடுதலை

குரும்பசிட்டி, செவ்வாய் குரும்பசிட்டியைச் சேர்ந்த முருகேசு சுவாமிநாதன் என்பவர் கீரிமலைக் கடற்கரையில் லைசென்ஸ் உத்தரவு இல்லாத சுழல் துப்பாக்கி யொன்றினை வைத்திருந்ததாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ். நெத்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அரசாங்க பரிசோதகரது சாட்சியத்தை விசாரித்து முடித்த பின்னர் எதிரியைச் சுற்றவாளியாகக் கண்ட நீதிபதி விடுதலை செய்து தீர்ப்பளித்தார். எதிரி சார்பில் அட்வக்கேட் கே. வி. என் சண்முகநாதன் அட்வக்கேட் எம். ஆலாலசுந்தரத்தின் உதவியுடனும் புறக்டர் ரீ. தம்பிரத்தினம் புறக்டர் எஸ் நடராசா ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானுர். வழக்காளிதரப்பில் காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதன் வழக்கை நடாத்தினுர்.

## அமெரிக்கா போனல் சமாதானம் வரும்

சிங்கப்பூர், செப். 4 'அமெரிக்காவும், அதன் சகாக்களும் தென்வியட்னுமிலிருந்து எல்லாத்துருப்புக்களையும் வாபஸ் பெற்ருல், உடனடியாகச் சமாதானம் ஏற்படும்" என்று வடவியட்னும் பிரதமர் பாம்வான் டொங் கூறியுள்ளார். (பி. டி. ஐ.)

## நெசவு நிலைய திறப்புவிழா

குரும்பசிட்டி, செவ்வாய் குரும்பசிட்டிகிராமமுன்னேற்றச் சங்கம் அரசினரின் உதவியுடன் நிறுவியுள்ள நெசவுநிலையம் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி செல்வநாயகத்தினல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட இருக்கின்றது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகராவும் வலி வடக்குப் பிரிவுக் காரியாதிகாரி திரு. வி. முருகேசம்பிள்ளையும் மங்கல குத்துவிளக்கேற்றி வைத்து சம்பிரதாயமுறைப்படி நெசவுநிலையக் கட்டிடத்தைத் திறந்து வைப்பர்.

## முன்னேறிவரும்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் அமெரிக்காவுக்கு அதிகமாக ஏற்றுமதிசெய்யப்படுகின்றன. இதுதவிர இரும்புக் கனிஜங்களும், வைரம் செம்பு, நிக்கல் குரோமியம், தங்கம், நிலக்கரிகளும் இங்கு காணப்படுகின்றன. பருத்தி நெசவுக் கைத்தொழில் இங்கு முன்னணிவகிக்கிறது. நாட்டின் 25 சதவிகிதத் தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். வருடந்தோறும் 20,00,000 தொன் எஃகும் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

கோப்பி, தேயிலை, கொக்கோ, அரிசி, சீனி, எண்ணெய் ஆகியவை இங்கிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இறக்குமதியிலும் பார்க்க ஏற்றுமதி கடந்த இரண்டுவருடங்களில் இங்கு அதிகரித்திருக்கிறது.

கல்வித்துறையில் இங்கு 32 பல்கலைக்கழகங்கள் உண்டு. கத்தோலிக்க மதத்தவரே இங்கு அதிகம். 8 கத்தோலிக்க பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. போர்ச்சுக்கீஸிய மொழியே இந்த நாட்டு மக்களின் மொழி.

—[illegible]

# 'உலக்கையால் அடித்தார் அது இரண்டாக முறிந்தது'

## சுழிபுரம் கொலைவழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், செவ் "காலம் சென்றவர்தனது மகனை அடித்துக்கிணற்றுக்குள்போட்டு விட்டார்கள் என்று கூறிக்கொண்டுகிணற்றை எட்டிப்பார்த்த போது பயங்கர ஆயுதங்களுடன் வந்த ஆறுஎதிரிகள் அவரைத் தாக்கினுர்கள்".


நேற்றுமல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ், நெத்சிங்கா முன்னிலையில் தொடர்ந்து சுளிபுரம் கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது சம்பவத்தை நேரில்பார்த்ததாகக்கூறப்படும் ஆறுமுகம் சுப்பையா சாட்சியளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து தங்கவேலு, வயிரமுத்து மாரிமுத்து, மாரிமுத்துசுந்தசாமி, மாரிமுத்துவயிரமுத்து தம்பையா சுப்பிரமணியம் பாலன் என்றழைக்கப்படும் விஜயகர் இரிபால சிங்கம் ஆகிய ஆறுபேரும் சென்ற மார்ச் மாதம் 31-ம் திகதி அதேயூரைச்சேர்ந்த வேலாயுதம்வயிரமுத்து என்பவரை கொலை செய்ததாகவும், அதே நேரத்தில் பழனிதவத்துரையைகத்தியால் வெட்டி அவருக்குக்காயம் விளைவித்ததாகவும் வயிரமுத்து விஜயமூர்த்தியை பொல்லால் அடித்துக்காயப்படுத்தியதாகவும், எல்லாமாகச் சங்கானைப்பொலிசாரால்மூன்று குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன.

சங்கானைப்பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையாவின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ரி. தம்பிரத்தினம் வழக்கைநடாத்தினுர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். செல்வரத்தினம் ஆஜரானுர்.

ஆறுமுகம் சுப்பையாசாட்சியமளிக்கையில் கூறியதாவது சம்பவ தினம் மாலை 4.30 மணியளவில் நானும் பிள்ளையினும் தோட்டத்தில் பயிர்களுக்கு இறைத்துக் கொண்டுநின்ருேம். அச்சமயம் காலம்சென்றவர் எனது மகனை அடித்துக்கிணற்றுக்குள் போட்டுவிட்டார்கள்' என்று கூறிக்கொண்டு ஓடி வந்து கிணற்றை எட்டிப்பார்த்தார். அப்பொழுதுஆறு எதிரிகளும் பயங்கர ஆயுதங்களுடன் அவ்விடம் வந்தார்கள். 2ம் எதிரி காலஞ்சென்றவரின் தலையில் இரும்புக்கம்பியால் அடித்தார். காலஞ்சென்றவர் திரும்பிக்கையால் 2ம் எதிரியைத்தாக்கினுர். அப்படித்தாக்கியவர் முகம்குப்புற விழுந்துவிட்டார். அப்பொழுது முதலாம் எதிரி வாச்சியால் காலஞ் சென்றவரின் நாரியில்வெட்டினுர். முதலாம் எதிரி வெட்டிப் போட்டுவாச்சியை இழுத்துப்பார்த்தார். வாச்சி வரவில்லை. 2ம் எதிரி வாச்சியைப்பிடித்து ஆட்டிவிட்டு இழுத்து வெளியில் எறிந்தார். அவ்வெட்டினுல்இரத்தம் பலமாகப்பெருகியது. 5ம் எதிரி உலக்கையால் காலம்சென்றவரின் முதுகில் அடித்தார். உலக்கை இரண்டாக முறிந்துவிட்டது. ஆறும் எதிரி பொல்லால் மு[illegible] இரண்டுதடவை அடித்தார். 3ம், 4ம் எதிரிகளும் பொல்லால் முதுகில் அடித்தார்கள். நான்போய் அவர்களைப் பிடித்துவிட்டேன். எதிரிகள் திரும்பிப்

(8-ம் பக்கம் பார்க்க)




# ஆசிரியருக்கு கடிதங்கள்

## நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகு சேவை சீரடையவில்லை

குறிகாட்டுவான் துறைமுகத்தைத் திறந்துவைத்த அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசுகையில் இரண்டு மோட்டார்ப்படகுச் சேவையாவது நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கு மிடையில் நடைபெறுமென கூறியிருந்தார். ஆனுல் இப்போது நிலைமையோ வேறுமாதிரியாகிவிட்டது. சேவையில் இருந்த 3 அரசாங்கப் படகுகளும் பழுதடைந்துவிட்டாதல் தினம் ஒரு சேவைமட்டுமே நடைபெறுகிறது. 'சில்வர்ஸ்பிறே' என்ற மோட்டார் படகு மட்டும் இந்த ஒருமுறைச் சேவையைச் செய்துவருகின்றது. இந்த ஒருமுறைச் சேவையால் பிரயாணிகளுக்குப் பெரிய தொல்லையும் கஷ்டமும் ஏற்பட்டுள்ளது.

ஒருமுறையில் நாற்பது பிரயாணிகள் மட்டும் இந்தச் 'சில்வர்ஸ்பிறே'யில் செல்லமுடிகிறது. அப்படியானுல் மிகுதிப் பிரயாணிகள் கதியென்ன? நாள் ஒன்றுக்குக் குறிகாட்டுவானுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பஸ்சேவை மட்டுமே இருக்கிறது. மிஞ்சியிருக்கும் பிரயாணிகள் குறிகாட்டுவானிலேயே தங்கிக் கஷ்டத்துக்குள்ளாகவேண்டியதாக இப்போது இருக்கிறது. இல்லையேல் 3 மைல்களுக்கு மேல் ஏறி பஸ் எடுக்கவேண்டியிருக்கிறது. எதற்கும் 'சில்வர்ஸ்பிறே' நெடுந்தீவிலேயே தங்கிக் காலையில் அங்கிருந்து சேவையை ஆரம்பித்துத் தினமும் இரு சேவைகள் செய்யுமாஞல் இந்தப் பிரயாணக் கஷ்டம் தீர்ந்துவிடும்.

—எம். கே.

நெடுந்தீவு

ஃ ஃ ஃ

## ஆபத்தில் உதவி

நெடுந்தீவு— குறிக்காட்டுவான் பிரயாண சேவை மூன்றுநாட்களாக (30-8-66--1-9-66) வரை ஸ்தம்பித்ததின் காரணமாக குறிக்காட்டுவானில் முந்நூற்றுக்கும் அதிகமான பிரயாணிகள் பிரயாணவசதியின்றி அவலப்பட்டனர் இவ் அவல நிலைக்குக் காரணம் கடும் காற்றும், அரசாங்க மோட்டார் படகான 'சில்வர்ஸ்பிறே பழுதடைந்தமையுமேயாகும். குறிக்காட்டுவானில்தவித்த நெடுந்தீவு மக்களுக்குத் தங்குமிடமும் உணவுவசதிகளும் ஏற்படுத்திக் கொடுப்பதில் குறிக்காட்டுவான் மக்கள் அயராது உழைத்தனர். இவர்களில் குறிக்காட்டுவான் சங்கக்கடை மனேச்சரும், உபதபாற்கந்தோர் அதிபரும் குறிப்பிடத்தக்க சேவை செய்தனர்.

ஒரு பிரயாணி
நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையின் வளர்ச்சி எதில் தங்கியுள்ளது?

வாழ்வில் ராஜீயம் மட்டும்தான் முக்கியமானதென்று நினைக்கக்கூடாது. வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் முதலிய எல்லாத்துறைகளும் முக்கியமானவைதான். இவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்குள்ள கஷ்டங்களை எடுத்துக்காட்டி அவைகளை நீக்குவதற்குப் பத்திரிகைகள் மூலம் வேலை செய்தால், அவர்களையும் பத்திரிகைகளைப் படிக்கும்படி செய்யலாம் அதனால் பத்திரிகைகள் வளர்ச்சியுறும். எல்லாவற்றுக்கும் மேலாக, தாய்ப்பாஷையின் சிறந்தையும் கௌரவமும் உணரும்படி ஜனங்களைச் செய்யவேண்டும்.

## தாய்ப்பாஷை பத்திரிகைகள்

தாய்பாஷைப்பத்திரிகைகளுக்குத்தான் எதிர்காலம்இருக்கிறது. சிலர் ஆங்கிலப் பத்திரிகையை வாசிக்கிறுலும், அவர்கள் வீட்டிலுள்ள ஆங்கிலம் தெரியாதவர்கள் தாய்ப்பாஷைப் பத்திரிகையை வாசித்தாகவேண்டும். ஆகவே ஆங்கிலப்பத்திரிகைகளின் தற்கால நிலைமை எதிர்காலத்தில் மாறுவிட்டாலும்கூட, தாய்ப்பாஷைப் பத்திரிகைகள் வளர்ச்சியடைவதற்கு இடமிருக்கிறது பத்திரிகைகளின் வளர்ச்சியைப்பொறுத்துத்தான் பத்திரிகையாளரின் வருமானமும் இருக்கிறது.

## விளம்பரத்தின் அவசியம்

பத்திரிகைகள் அதிகமாய்ச் செல்வாகுல் தான் விளம்பர வருமானம் அதிகமாகும் விளம்பர வருமானம் இல்லாமல் பத்திரிகையை நடத்த முடியாது. தினசரிப்பத்திரிகைகளை எடுத்துக்கொண்டால் பத்திரிகைகளின் பக்கங்களை சர்க்கார் கட்டுப்படுத்துவதற்கு முன்னுல் வரையில் பத்திரிகை என்ன விலைக்கு விற்கப்பட்டதோ அதற்கு மேலாக அரைப்பங்காவது பத்திரிகையை உற்பத்தி செய்யும் செலவு ஆகிறது. ஒன்றரை அணு ஆகிற பத்திரிகையை ஒரு அணுவுக்கு எப்படி விற்கிருர்கள் என்றுல் விளம்பர வருமானம் அதற்கு ஈடுகொடுக்கிறது. விளம்பர வருமானம் உயருவதைப் பொறுத்துத்தான் பத்திரிகையில் செய்யப்படும்சீர்திருத்தங்களிருக்கின்றன. பத்திரிகையின் விற்பனை உயர்வைப் பொறுத்துத்தான் விளம்பர வருமானத்தின் உயர்வு இருக்கிறது ஆங்கிலப்பத்திரிகைகளில் செய்யப்படும் உயர்வான அபிவிருத்திகளைப் போல தாய்ப்பாஷைப் பத்திரிகைகளில் இல்லையே என்று சிலர் கேட்கிருர்கள். இரண்டும் ஒரே விலைக்கு விற்கப்படும்போது, ஏன் ஆங்கிலப் பத்திரிகைகளைப் போல தாய்ப்பாஷைப்பத்திரிகைகள் இருக்கக்கூடாது என்று வியாக்கியானம் செய்கிருர்கள். ஆனுல் இரண்டுக்கும் விளம்பர வருமானம் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்தியாவில் ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்கு மாதம் மூன்று லட்சம் ரூபாய் விளம்பரத்திலிருந்து கிடைக்கிறது. மூன்று லட்சம் ரூபாய்கள் கிடைக்கும்போது எல்லாத்துறைகளிலும் முதல்தரமானவைகளையே அப்பத்திரிகை செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இந்திய பத்திரிகைகளில் மாதம் லட்சம்ரூபாய்க்குமேல்வருமானமுள்ளது எதுவுமில்லை. நமது மாகாணத்திலுள்ள தாய்ப்பாஷைப் பத்திரிகைகளின் விளம்பர வருமானம் ரொம்பக்குறைவு. மாதம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் விளம்பர வருமானமுள்ள தாய்ப்பாஷைப் பத்திரிகை நமது மாகாணத்தில் எதுவுமில்லை. பத்தாயிரம் வருமானமுள்ள தாய்ப்பாஷைப் பத்திரிகையை, லட்சம் வருமானமுள்ள ஆங்கிலப் பத்திரிகையைப்போல எப்படி நடத்த முடியும்?

— டி. சொக்கலிங்கம்

# கதம்ப மாலை

## யாழ்ப்பாணம் வருகிருர்கள்

'தீபம்' சஞ்சிகையின் ஆசிரியர் திரு. ந. பார்த்தசாரதி 'மணிவண்ணன்' யாழ்ப்பாணம் வருவார். எதிர்வரும் 13ம் தேதி அவர் இலங்கை வந்துசேர்வார். கொழும்பில் உள்ள இறக்குமதி ஏற்றுமதித்திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினர் நடாத்தும் பாரதி விழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு இலங்கை வரும் மணிவண்ணன் 22ந் தேதி வரை இலங்கையில் தங்கிநிற்பார் அவர் யாழ்ப்பாணம் வருவதற்கான ஒழுங்குகளை யாழ். இலக்கிய வட்டம் மேற்கொண்டிருக்கின்ற தென்றும், யாழ்ப்பாணத்தில் கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்வோர் செயலாளர், யாழ். இலக்கியவட்டம், மாநகரசபை யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறுர யா. இ. வ. காரியதரிசி அறிவிக்கின்றுர். இது தவிர.

ஃ ஃ ஃ

கம்பன்கழகத்தின் அழைப்பின் பேரில், தமிழறிஞர் அ. ச. ஞானசம்பந்தனும் கவிஞர் கண்ணதாசனும். கழகத்தின் மூன்ருவது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்கு இங்கு வருகின்றனர்.

## புத்தகக் கண்காட்சி

யாழ் - இலக்கிய வட்டம் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடாத்த விருக்கிறது. இக்காட்சியில் ஈழத்தில் வெளிவந்த புத்தகங்களே இடம் பெறும். இதுவரை பலநூற்றுக்கணக்கான புத்தகங்களைத் தாம் சேகரித்துள்ளதாகவும் இந்தப்பெரிய விஷயத்தில் சிறியதவறுகள் ஏற்படுவது சகஜம்என்றும் அவ்வித தவறுகள் ஏற்படாதிருப்பதற்குஎழுத்தாளர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும், ஈழத்து எழுத்தாளரின் நூல்கள் கண்காட்சியில் இம்பெறத் தவறிவிடாதிருக்க கூடு [illegible] [illegible] டக்காரியதரிசி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

# தமிழ்ப் பெரியார் கிருஷ்ணன்

'நகைச்சுவை மன்னன்' கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் நினைவு தினம் கடந்த 30ம் தேதியாகும். அவர் ஒரு தமிழ்ப் பெரியார் என்கிருர் அறிஞர் வ. ரா. 'தமிழ் பெரியார்கள்' என்ற நூலில் வ. ரா. கலைவாணரைப் பற்றி எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.

என்னோடு ஒரு நண்பர் வந்தார். 'ஏது இத்தனை பேர் கூடியிருக்கிருர்களே என் புரோக்கிராமை கேட்பதற்காக!' என்று கேலியாக அந்த நண்பரைக் கேட்டேன். 'இல்லை உங்களுக்கு முன் என். எஸ். கிருஷ்ணன் புரோகிராம் ஒன்று இருக்கிறது. அதைக் கேட்க நூற்றுக்கணக்கானவர்கள் இங்கு கூடியிருக்கிருர்கள். உங்களுக்கு என்று எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம்!, என்று நண்பர் விளக்கமாகச் சொன்னுர்.

ஸர் ஸி. வி. ராமன் ரேடியோவில் எவ்வளவு அழகாகப் பேசுகிருர். நுட்பமாயிருக்கும் ஸயன்ஸை தெளிவாக எடுத்துச் சொல்கிருர். அவர் பேசுவதில் விஷயம் இருக்கிறது. நகைச்சுவை ததும்புகிறது. அப்படியிருந்தும், அவரது பேச்சைக் கேட்பதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் கூடுவதில்லை. அழகாக அவர் தமிழில் பேசினுலும்கூட பராட்டார்கள் என்பதே கருத்து.

ராமனும் மேதாவி, கிருஷ்ணனும் மேதாவி. புராண ராமனையும், கிருஷ்ணனையும் பற்றி நான் சொல்லவில்லை. பூலோகத்தில், தற்காலத்தில் உலகப்புகழோடு வாழும் ஸர் ஸி. வி. ராமனையும், எப்பொழுது பேசப் போகிருர் என்று நூற்றுக்கணக்கானவர்கள் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் என். எஸ். கிருஷ்ணனையும்பற்றித் தான் சொல்கிறேன்.

சமீபத்தில் கிருஷ்ணனுடைய நடிப்பை ஒரு சினிமாப் படத்தில் பார்த்தேன். நான் பிரமித்துப் போனேன். கழைக் கூத்தாடிகளின் கூட்டத்தில் (படத்தில்) கிருஷ்ணன் இருக்கிருர். அவர்கள் வித்தை காண்பிக்கப் போவதை கிருஷ்ணன் அவவிக்கிருர். அவர் அறிவிப்பதே ஒருவித அலாதி!

அவர் நடக்கிறநடையும், நிற்கிற நிலையும், பேசுகிற குரலிலும், விழிக்கிற விழியும் எல்லாம் நம்மிடத்தில் சிரிப்பை அடிவயிற்றிலிருந்து கிளப்பத்தான் செய்கிறது,

ஹாஸ்யத்திலே, எந்த ரகம் மிகவும் உயர்ந்தது? பத்துப் பேர்கள் கூடியிருக்கிற இடத்தில் எல்லோரும் சிரிக்க வேண்டும், அப்படி சமுதாயமாக எல்லோரும் சிரிக்காமல், ஒரிரண்டு பேர்கள் தலைகுனிந்து கொண்டு அவமானம் அடைந்தவர்களாக இருக்கநேரின், அந்த விகடம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது அல்ல.

தன்னைத்தானே நொந்து கொள்வது மாதிரி சொல்லி எல்லோரையும் கலகலவென்று சிரிக்கச் செய்வது தான் உயர்ந்தரக விகடமாகும். கிருஷ்ணன் பிறரைக் கேலி செய்யும் விதமே தனிப்பாணி! யாரை அவர் கேலி செய்கிருரோ அவரும் சேர்ந்து சிரிக்கும்படியான விதத்தில் கிருஷ்ணன் கேலி செய்கிருர்.

கிருஷ்ணன் தமிழ் நாட்டுக்கு மட்டும் சொந்தமான கிருஷ்ணனல்ல, அவர் தமிழுலகம் முழுவதுக்கும் சொந்தமான கிருஷ்ணன்!

# சிறந்த திரைக் கதாசிரியருக்கு பரிசு!

இன்று யூகோஸ்லாவியாவின் திரைப்படத்தினைப் பற்றியும் அதன் வளர்ச்சியைப் பற்றியும் எண்ணும் போது உடன் எமது ஞாபகத்துக்கு வருவது, மிகவும் விளம்பரப்படுத்தப்பட்ட அந்தநாட்டின் சிறந்த இயக்குனரான டுசைன்வுட் கோற்றிக் அவர்களால் இயக்கப்பட்டு, செக்கோஸ்லோவாக்கியாவின் பிறிதொரு படத்தயாரிப்பு நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து தயாரிக்கப்பட்ட 'த செவின்ந் கொன்டினென்டு' (ஏழாவது கண்டம்) என்ற படமேயாகும். இந்தப்படத்தில் உள்ள நடிகர்கள் அனைவரும் சிறுவர்களாகும். இதில் அநேக நாட்டுச் சிறுவர்கள் நடிக்கின்றுர்கள். படத்தின் கருயாதெனில் சாதி, இன, மத, நிறவேறுபாடின்றி எல்லா நாட்டுச் சிறுவர்களும் சேர்ந்து ஒரு புதிய உலகத்தினை உருவாக்குகின்றனர். அவர்களால் உருவகமான உலகம்தான்ஏழாவது கண்டமாகும். இவ்வாறுக சிறந்தபடங்கள் யூகோஸ்லாவியாவில் தயாராகின்றன. ஆகையால் இப்படங்கள் யாவற்றிலும்மிகவும் சிறந்த படம் எது என்பதைத் தெரிவுசெய்வதற்காக வருடாவருடம் தேசிய திரைப்பட விழா இங்கு நடைபெறுகின்றது.

இவ்வருடம் யூகோஸ்லாவியாவின் திரைப்படம் வட ஆட்றியாட்டிக்கடல் ஓரத்தில் உள்ள போலோ நகரத்தில் நடைபெறவிருக்கின்றது. இவ்வருடத் திரைப்படவிழா மிகவும் சிறப்பாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை திரைப் படப்போட்டிக்கு இருபது படங்கள் அளவில் பரிசளிக்கப்பட இருக்கின்றன. அவைகளில் பத்துப் படங்கள் 'அவாலா', என்ற தயாரிப்பு நிறுவனத்தினர் தயாரித்த படங்களாகும், செகரப்பில் உள்ள 'ஜாட்றுன்' தயாரிப்பு நிறுவனத்தினர் தமது மூன்று படங்களைப் போட்டிக்கு அனுப்பிவைக்கவுள்ளனர். லுஹிப்ஜியானாவில் உள்ள 'விபா' ஸ்கோறேயில் உள்ள 'வர்தார்', சரோஜிவோவில் உள்ள 'பொஸ்னுபிலிம்' ஆகிய தயாரிப்பு நிறுவனங்கள் முறையே இவ்விரண்டு படங்களைப் போட்டிக்கு அனுப்பிவைக்க உத்தேசித்துள்ளன.

இம்முறை நடைபெறவிருக்கும் தேசிய திரைப் பட விழாவில் போட்டிக்கு அனுப்பப்படும் படங்களில் சிறந்த படம் எனக்கருதப் படும் படத்தின் கதாசிரியருக்கு படவிழாவினை ஒழுங்கு படுத்துபவர்கள் கொடுக்கும் பரிசினைவிட யூகோஸ்லாவியா பிலிம் என்ற வர்த்தக ஸ்தாபனம் 20,000 புதிய டினுக்கள் பரிசாக வழங்க முன்வந்துள்ளது. எல்லாத்திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களின் கவனத்தினையும் ஈர்த்துள்ளது.

- இரா.

# முத்துச்சரம்

## புதுமைப்பித்தன்

ஒரு சினிமாக் கம்பெனி பிரமாண்டமான செலவில் ஒரு படம் தயாரித்தது. ஆனுல் படம் முடிந்தபாட்டைக் காணும். காரணம், அந்தப் படத்தில் புதிய புதிய அம்சங்களைப் புகுத்த வேண்டுமென்பதற்காக, அப்போதைக்கப்போது வெளிவரும் ஆங்கிலப் படங்களிலிருந்து பல அம்சங்களைக் காப்பியடித்து தன் படத்தில் புகுத்திக் கொண்டிருந்தது அந்தக் கம்பெனி.

இதைப்பற்றி புதுமைப்பித்தன் தன் நண்பர் ஒருவரிடம் பின்வருமாறு கூறுகிருர்!

"கண்ட படத்திலிருந்தும் காப்பியடித்துக் கொண்டிருக்கிருர்கள். கடைசியில் படம் வெளிவரும்போது எப்படி இருக்கும் தெரியுமா? குடுகுடுப்பைக்காரன் சட்டை மாதிரி இருக்கும்" என்ருர்.

அதாவது துண்டுத் துணிகளை ஒட்டிவைத்துக் கோமாளி மாதிரி குடுகுடுப்பைக்காரன் போட்டிருப்பானே, அந்தமாதிரி என்பதைத்தான், அதாவது கோமாளித்தனமான படம் என்பதையேஅவர் இப்படிக் குறிப்பிட்டார்

ஃ ஃ ஃ

## கல்கி

ஒருசமயம் கல்கி அவர்கள் என். எஸ். கிருஷ்ணன் வீட்டுக்குச் சென்றிருந்தார். கிருஷ்ணன் கல்கியை நாற்காலியில் உட்காரச் சொல்லி 'என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பி கொண்டுவரச் சொல்லட்டுமா? அல்லது டீ கொண்டுவரச் சொல்லட்டுமா?' என்று கேட்டார். கல்கி அவர்கள் சற்று யோசித்துவிட்டு, 'டீயே மதுரம்!' என்ருர்.

ஃ ஃ ஃ

## நல் முத்து

நூலினைப் படித்து அதன் உண்மைப் பொருளை அறிதலும், உண்மைக்கு மாருன சொற்களை எப்போதும்சொல்லாதிருந்தாலும், உயர்ந்தசொற்களைச் சிற்றினமல்லாதவரிடத்தே சொல்லுதலும் ஆகிய இம்மூன்றும் கற்றறிந்த மக்கள் செயல்.

— திரிகடுகம்

தொகுப்பு: அகாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜே. ஆர். தேசிய ஒற்றுமை பேசுவது வியப்பாயிருக்கிறது'

## பொன். கந்தையா நினைவுவிழாவில் பேச்சு

உடுப்பிட்டி, செவ்வாய் ''உலகட்கு விளங்கக்கூடிய தமிழ் மொழியில் பேசமுடியாமைக்கு வருந்துகின்றேன். பொன். கந்தையாவின் நினைவுக் கூட்டத்தில் எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததுகுறித்து மகிழ்ச்சியடைகின்றேன், கந்தையா தனது தொகுதிக்கு மட்டுமல்லாமல் இலங்கையின் சகல தொகுதிகட்கும் சேவையாற்றியுள்ளார். ஓர் சிறந்த புரட்சிவாதியும், மார்க்ஸிய வாதியுமாகத் திகழ்ந்த கந்தையா சொல்வன்மையும், செயல் வன்மையுமிக்கவர். கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் திரு. கந்தையாவும் நானும் ஒன்றாகச் செயலாற்றினோம். முன்னாள் பருத்தித்துறை எம். பியும், கம்யூனிஸ்ட் பிரமுகருமான காலஞ்சென்ற திரு. பொன். கந்தையா ஞாபகார்த்த விழா நேற்றிரவு நெல்லியடிச் சத்திக்கடுகாலைமயிலுள்ள மைதானத்தில் திரு. எஸ். ஈ. இந்திரன் தலைமையில் நடைபெற்ற பொழுது இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் உபதலைவரும், இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளருமான திரு. ஹிக்கொட தர்மசேன பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கே. தர்மசேன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''சிங்களவர் — தமிழர் என்ற வேறுபாடின்றி எல்லோடும் ஒரே இனமாக வாழ முயற்சிக்க வேண்டும். அண்மையில் மாவிட்டபுரத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டுக்குச் சமூகம் தந்த அமைச்சர் திரு. ஜெயவர்த்தன தேசிய ஒற்றுமை பற்றிக் குறிப்பிட்டார். காலஞ்சென்ற பண்டாரநாயக்கா தமிழ் மொழிக்கு ஓரளவு நியாயம் வழங்க முன்வந்த பொழுது திரு. ஜெயவர்த்தன பலமாக எதிர்த்தார்.

தமிழருக்கு உரிமை வழங்குவதை நிறுத்த வேண்டும் எனக் கோரிக் கண்டியாத்திரை செய்த திரு. ஜெயவர்த்தன இப்பொழுது தேசிய ஒற்றுமை'' பற்றிப் பேசுவது வியப்பையளிக்கிறது. தேசிய ஒற்றுமை பற்றிப் பேச இவர்கள் அருகதையற்றவர்கள். தற்பொழுதுதான் இலங்கையில் முதன் முதலாகத் தேசிய ஐக்கியம் ஏற்பட்டிருப்பதாக ஏழு கட்சியினரும்கூறி வருகின்றனர். 1949-ம் ஆண்டில் டி. எஸ் சேனநாயக்காவின் மந்திரிசபையில் திரு. பொன்னம்பலம் சேர்ந்த பொழுது தேசிய ஐக்கியம் இருக்கவில்லையா' மகாவலி கங்கையை வடக்கே திருப்பவேண்டும் என்று முதற்குரல் கொடுத்தவர் பொன். கந்தையா ஆவார். தேசிய அரசாங்கம் அமைத்து ஒருவருட காலமாகிவிட்டபொழுதிலும் இதுவரை ஒரு பிரச்னைகளும் தீர்த்து வைக்கப்படவில்லை.

திருவாளர்கள் வீ. ஏ. கந்தசாமி, எம். செந்தில்வேலன் எஸ். சிவதாசன், வே. டானியல் ஆகியோரும் பேசினர்.

# 'குறைகூறும் வேளையில் நல்லதையும் பாராட்டுங்கள்!'

சுழிபுரம், செவ்வாய் ''இன்று மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தியாக்கும் இலாகாக்களில் தபால் இலாகா முதன்மை வகிக்கின்றது. தினமும் இலட்சக் கணக்கான கடிதங்களையும், தந்திகளையும் நாடு பூராவாகவும் விநியோகம் செய்கின்றது. பொதுமக்கள் தபால் பகுதியினர் விடும் சிறு குறைபாடுகளை சுட்டிக் காட்டி குறைகூறும் அதே வேளையில் அவர்கள் செய்யும் அரும்பெரும் பணியையும் நல்லதையும் பாராட்டப் பின்னிற்கக்கூடாது.

பண்ணாகம் உபதபால் கந்தோர் தொலைபேசித் தொடர்பை ஆரம்பித்து வைத்து வடபகுதி தபால் அதிபர் திரு. சி. ஆறுமுகம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார், திரு. ச. சம்பந்தமூர்த்தி விழாவுக்குத் தலைமை வகித்தார். சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு, கந்தசுவாமி பேசுகையில் மக்களின் தேவைக்குத் தக்கவாறு தபாற்சேவை நடைபெற வேண்டுமென்றும் சேவையில் ஏற்பட்டிருக்கும் காலதாமதம் மேலும் நீடிக்காமல் உடனுக்குடன் சேவைசெய்ய வேண்டுமென்றும் கூறினார்.

## 'ஒற்றுமையாக வாழவேண்டும்'

சுழிபுரம், செவ்வாய் ''நாம் அனைவரும் சாதி சமய வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழவேண்டும். அப்போது தான் எமது சமூகம் முன்னேறமுடியும்' என்று வட்டுக்கோட்டை மேற்கு சனசமூக நிலையத்தின் 11-வது ஆண்டுநிறைவு விழாவில் பேசுகையில் வட்டுக்கோட்டை எம். பி திரு. அ. அமிர்தலிங்கம்குறிப்பிட்டார். விழாவுக்கு சங்கத் தலைவர் திரு. ஆ. சண்முகநாதன். தலைமை வகித்தார். திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் ''ஒரு கிராமத்தின் வளர்ச்சியும், உயர்ச்சியும்அக்கிராம வாசிகளின் கையிலேயே தான் தங்கியுள்ளது. ஆகவே அவர்கள் கல்வியறிவு பெற்று சிறந்த தொழில்களைச் செய்து நற்பிரஜைகளாக வாழவேண்டும்'' என்றார்.

திருவாளர்கள் வ, அமிர்தலிங்கம், இ. ஆனந்தராசா. சி. 'நடராசா, ரி. துரைசிங்கம், இராசையா. எஸ் செந்தில்வேல் உட்பட. மற்றும் பலரும் பேசினர்.

## ''எமது பிரச்னையை உடன் தீர்க்குக''

யாழ்ப்பாணம், திங்கள் தமிழ் மக்கள் உரிமைப் போராட்டம் நடாத்திய காலங்களிலெல்லாம். சிறுபான்மைத்தமிழ் மக்களும் தங்கள் பங்கைச் சரியாகச் செய்தனர். தமிழர்களும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இந்தநேரத்திலாவது தமிழ்த் தலைவர்கள் எமது பிரசனையைத் தீர்க்காவிட்டால், நாமே நமது நிலையை நிர்ணயிக்கவேண்டும்.

கொடிகாமத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சமூகச்சுடர் என்ற நாடகத்திற்கு தலைமை வகித்துப் பேசிய தென்மராட்சி, மக்கள்முன்னேற்றமன்றச்செயலாளர், திரு. க. நடராசா மேற்கண்டவாறு கூறினார்.

சத்தியாக்கிரக மூலம், எமது உரிமைக்காக போராடத்திர்மானித்துள்ளோமென்றும் அவர் மேலும் பேசும்போது கூறினார்.

உதைபந்தாட்டம்

## சென். மேரிஸ் வென்றது

யாழ்ப்பாணம், செவ். நாவாந்துறை சென். மேரிஸ் உதைபந்தாட்ட பி பிரிவுக் கோஷ்டிக்கும், குருநகர் யுனைட்டெட் பி பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென். மேரிஸ் பி பிரிவினர் 4-0 கோல்களால் வெற்றிபெற்றனர்.

ஆரம்பத்திலிருந்து இரு கோஷ்டிக்கும் இடையே போட்டிவலுவாகவிருந்தது. இடைவேளைக்குப் பின் குருநகர் கோஷ்டியினரிடையே சிறிது சோர்வு காணவே சென். மேரிஸ் கோஷ்டியைச் சேர்ந்த வீரர் அடைக்கலம் ஒரு கோலை லாவகமாகப் போட்டார். அடுத்தும் இவரே இன்னொரு கோலைத் தள்ளினார். அதன்பின் போட்டி விறுவிறுப்பாக அமைந்தபோதிலும் ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் சென் மேரிஸ்கோஷ்டியைச் சேர்ந்த பின்னணி வீரர் நீ. அருளானந்தம், முன்னணி வீரர் அடைக்கலம் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு எண்ணிக்கையை நாலாக்கினர். இப்போட்டிக்கு என். எஸ். முருகேசு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## 10-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன் கிறீன்பீல்ட் விளையாட்டு கழகத்தின் பத்தாவது வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 20, 21. திகதிகளில்கடலணை மைதானத்தில் நடைபெறும். விசேஷ நிகழ்சியாக 20ம். தேதி செவ்வாய்க்கிழமை காலை 6-30 மணிக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி. 15 மைல் மரதன் ஓட்டப் போட்டி இடம்பெறும்.

## தர்மபாலா சாம்பியன்

இரத்தினபுரி, செவ். இரத்தினபுரி மாவட்ட பாசாலைகளுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போடி. இரத்தினபுரி எம். பி. அட்டியகல தலைமையில் நடைபெற்றது. இரத்தினபுரி தர்மபால பௌத்த வித்தியாலயம் 109 புள்ளிகளைப் பெற்று சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

இரத்தினபுரி மாவட்ட உதவிவித்தியாதிபதி செல்வி பெர்னாண்டோ பரிசில்கள் வழங்கினார்.

## தமிழ்ச்சங்க மாணவர் முதலிடம் பெற்றனர்

சுழிபுரம், செவ்வாய் யாழ்ப்பாணம் ஆரியதிராவிடப்பாஷாபிவிருத்திச்சங்கம்பிரவேசபண்டித பரீட்சைக்குஇவ்வருடம் தோற்றிய பரீட்சார்த்திகளில், வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்க மாணவர் பலர் முதலாம் இரண்டாம் பிரிவுகளிற் சித்தியடைந்துள்ளனர் தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்த செல்வி மு. யோகேஸ்வரி என்பவரே முதற்பிரிவிற் சித்தி யெய்திய ஒரே ஒருவராவர். இரண்டாம் பிரிவில் நால்வரும் மூன்றாம் பிரிவில் மூவரும் சித்தி யெய்தியுள்ளனர். நால்வர் நூல சித்திபெற்றனர்.

## ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, செப். 5 இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனின் 78 வது பிறந்த தினத்தை [illegible] அவருக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பினர்.

## டார்வினுக்கு 281 புள்ளிகள்

மாத்தளை, செவ்வாய் அரசாங்க விஞ்ஞானக்கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி உதவி வித்தியாதிபதி திரு. ஷி. ஏச் பி. எக்கநாயக்கா தலைமையில் நடைபெற்றது டார்வின் இல்லம் 281 புள்ளிகளை எடுத்து முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. திருமதி எக்கநாயக்கா பரிசில்கள் வழங்கினார்.

## பண்டத்தரிப்பு கி: ச. கூட்டம்

சங்கானை, செவ்வாய் பண்டைத்தரிப்பு கிராம சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர். திரு. இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இவ் வட்டாரத்திற்கு மின்சார விநியோகம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றும், பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரியில் ஓர் பிரசவப்பகுதிஅமைக்க வேண்டுமென்றும். கோரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் ட்டன.

## பதில் இல்லை! எம். பி.யிடம் புகார்

கிளிநொச்சி, செவ் கிளிநொச்சியில் இருந்து மோட்டார் போக்குவரத்து பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பித்து மாதம் மூன்றாகியும் எவ்விதபதிலும் கிடைக்கவில்லை. விண்ணப்பத்தாரர் யூன்மாதத்தில் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்து யூலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களும் பதிலை எதிர்பார்த்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை, விண்ணப்தாரர் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினரிடம் இது பற்றி உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளனர்.

## சைவப் புலவர் 6-வது ஆண்டுவிழா

கண்டி, செவ் அகில இலங்கைச்சைவப் புலவர் சங்க ஆறுவது மகாநாடு கண்டி இந்து சிரேஸ்ட பாடசாலை மண்டபத்தில் கலாநிதி திரு. சு. வித்தியானந்தன் தலைமையில் சென்ற ஞாயிற்றுக்கிழமைசிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் பிரம்மஸ்ரீ இ. வா. ஐகந்நாதன் அவர்களுக்கு 'சைவபூஷணம்' என்ற பட்டமும ந. குமாரசாமிப்புலவருக்கு 'சைவப் புலமணி' என்றபட்டமும் வழங்கப் பட்டது. திரு. ந. சிவப்பிரகாசம் பண்டிதர் மெ. மகிபாலப்பிள்ளைவித்துவான்சைவப் புலவர் திரு.ச. சச்சிதானந்தம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர்.

## பதுளை பொலிஸ் வெற்றி

பதுளை, செவ்வாய் பண்டாரவளை மாவட்ட பொலிஸ் பகுதியினரின் விளையாட்டுப் போட்டி பதுளை விளையாட்டரங்கில் நடைபெற்றது. பதுளை பொலிஸ் பகுதியினர் 54 புள்ளிகளை எடுத்து முதலிடத்தைப்பெற்றுக்கொண்டனர்.

## நிறைவு விழா

யாழ்ப்பாணம், புதன் ஏழாலைதென்மேற்கு இந்து சமய விருத்திச்சங்கத்தின் எட்டாவதுஆண்டு நிறைவு விழாசூராவத்தை அம்மன் ஆலயத்தில் திரு மு. சிற்றம்பலத்தன்தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி திரு. நா, இரத்தினம் தமது வருடாந்த அறிக்கையையும் 8-ம் ஆண்டின் அறிக்கையையும் வாசித்துச்சமர்ப்பித்தார்.

## கெனமன் வருகிறார்

உடுப்பிட்டி, செவ் கொழும்பு மத்திய தொகுதி எம். பி. திரு, பீட்டர் கெனமன் இம்மாதம் 12-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். 13-ம்திகதி வல்வெட்டித்துறையில் நடைபெறும் பொன். கந்தையா நினைவு விழாவில் கலந்து கொள்வார். சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய இடங்களிலும் பொதுக்கூட்டங்களில் பேசுவார்

## தலைவர் முயற்சி கைகூடுகிறது

சங்கானை செவ் சங்கானை பட்டினசபைத் தலைவர் [illegible]ஸ், கே. திருச்சிற்றம்பலத்தின் விடாமுயற்சியால் பட்டின சபைக்காரியாலயத்திற்கு தொலைபேசியும் சங்கானைப்பொலிஸ் நிலையத்திற்கு சமீபத்தில் ஓர்தபால்பெட்டியும்அமைப்பதற்குத் தபால் இலாகா இணங்கியுள்ளது.

## பதவி உயர்வு

திருக்கேதீச்சரம், செவ் மாந்தைப்பிரிவுக் காரியாதிகாரி அலுவலகத்தில் பிரதம லிகிதராக கடமையாற்றும் திரு. கணபதிப்பிள்ளை சாம்பசிவன் அரசாங்க நிறைவேற்று எழுதுவினைஞர் சேவையில் இரண்டாம்தரத்திலிருந்து முதலாம் தரத்திற்குபதவி உயர்வுபெற்றுள்ளார்.

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இரும்பு - பித்தளை மர ஸ்குரு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 7143 — 2029
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'கைலஞ்சம் வாங்குபவர் மீது கடும் நடவடிக்கை எடுக்குக!'

## ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க மகாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன் ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்களிடம் கைலஞ்சம் வாங்கும் அதிகாரிகள்மீது மந்திரி கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற தீர்மானம் நேற்றுமாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற ஐக்கியஇலங்கை ஸ்தலஸ்தாபனதொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 5-வது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

திரு. வ. நட்சத்திரம் தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது. அவர் தமது தலைமை புரையில் கூறியதாவது:

இந்நாட்டின் தொழிற்சங்க வரலாற்றில் நமது சங்கத்தைப் பொறுத்தமட்டில் முக்கியபங்கு செலுத்தி வருகிறோம், எமது கைகளில்தான் இந்நாட்டு மக்களின் சுகாதார வாழ்க்கையும், நாளாந்த சுகாதாரகாழ்க்கையும் தங்கியுள்ளது.

நாகரிகமுள்ள எல்லா நாடுகளிலும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. இப்போது தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளதால் தொழிலாளர் பிரச்னை தீரும் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

அரசாங்க தொழிலாளர்களுக்கு இருப்பது போன்ற சகல சலுகைகளும் ஸ்தலஸ்தாபன தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும்.

பிரஜாவுரிமை வழங்கப்படும் போது இங்கு வேலை செய்யும் இந்திய ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்களுக்கு விசேஷ சலுகை வழங்கவேண்டும்.

# பதிவுப் பிரஜைகள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை

## புதிய சட்டத்தில் வெளியாகும்

கொழும்பு, செவ். நாடற்ற பிரஜைகளாய் இருந்து ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரஜாவுரிமை பெறவிருக்கும் இந்திய வம்சாவளியினரை தனி ஜாபிதாவில் பதிவுசெய்வதா அல்லது பொது ஜாபிதாவில் பதிவுசெய்வதா [illegible] வது குறித்துத் திட்டவட்டமான ஒரு கொள்கையை வெளியிடும்படி அரசாங்கத்தை இந்திய வம்சாவளியினரைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் பல ஸ்தாபனங்கள் கேட்டுக்கொள்ளவிருப்பதாக அறியப்படுகின்றது.

பதிவுப் பிரஜைகளுக்குப் பல துறைகளிலும் பாகுபாடு காட்டப்படுவதாக கடந்த வாரம் பிரதிநிதிகள் சபையில் இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் குற்றஞ்சாட்டினார். ஜவுளி விநியோகம் போன்ற விஷயங்களில் பதிவுப் பிரஜைகளும் நாடற்றவர்களாயிருக்கும் மக்களும்தொடர்ந்துபாகுபாடு காட்டப்பட்டு வருகிறார்களென்று குற்றஞ்சாட்டியதோடு இந்த விஷயம் தொடர்ந்து இப்படியே இருந்தால் சர்வதேசத் தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் கவனத்துக்கு இதைக் கொண்டுவந்து மனித உரிமைகள் சாஸனத்தின்கீழ் நியாயம் கேட்கப்போவதாக அறிவித்தார்.

இதற்கிடையில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரஜா உரிமை வழங்கப்படுவதற்கான நகல் மசோதா வொன்று தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

பதிவுப் பிரஜைகளை பொதுவாக்காளர் இடாப்பில் வைப்பதா இல்லையா என்பது பற்றி இந்த மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப் படும்போது அறியக்கூடியதாயிருக்கும்.

## பொலிஸ் ஜீப்பும் லொறியும்மோதின

மாவிட்டபுரம், செவ். பொலிஸ் கோஷ்டியொன்றை ஏற்றிவந்த ஜீப்பும், லொறியொன்றும் ஏழாலைச் சந்தியொன்றில் மோதிக்கொண்டன!

சுன்னாகம் நோக்கி மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் றோட்டால் வந்துகொண்டிருந்தபோதே இந்த பொலிஸ் கோஷ்டியினர் விபத்துக்குள்ளாஞர்கள். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேர்ஜி வீரசூரியா இக்கோஷ்டியின் தலைவராகவிருந்தார் இந்தவிபத்தில் கான்ஸ்டபிள் அபயக்கோனுக்கு காலில் காயமேற்பட்டதாக அறியப்படுகிறது இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக காங்கேசன்துறை பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. டபிள்யு. வியனகே விசாரணை நடாத்திஞர்.

## உலக்கையால் . . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போஞர்கள். அச்சமயம் காலஞ் சென்றவரின் மருமகன் தவத்துரையும் மகன் விநாயகமூர்த்தியும் அவ்விடம் நோக்கி வந்தார்கள். அவர்களையும் எதிரிகள் தாக்கிஞர்கள்.

பின்னையிஞர் இரத்தம் பெருகிய இடத்தை ஒருகையால் அடைத்துக்கொண்டு மறுகையால் சால்வையைக் கிழித்து கட்டுப்போட்டார். காலஞ்சென்றவர் "நான் சாகப்போகிறேன். என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கள்" என்றுகேட்டார். நான்மற்றவர்களின் உதவியுடன் அவரைக்காருக்குள் தூக்கிப் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனேன். அடுத்தநாள் பின்னேரம் பொலிசாருக்கு வாக்குமூலமளித்தேன்.

சாட்சியை எதிரிகள் தரப்புவழக்கறிஞர் திரு. செல்வரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது: காலஞ் சென்றவரின் நாரிவெட்டுக்காயத்திஞல் இரத்தம் பெருகுவதைக்கண்டதும் எனது தலை சுற்றத்தொடங்கியது. நான் 12 அடி பின்னுக்குச் சென்று கண்ணை மூடிக்கொண்டு நின்றேன்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்: நீர் வாச்சிவெட்டிஞல் இரத்தம் பெருகுவதைக் கண்டதும் கண்ணைமூடிஞல் பிறகுநடந்த சம்பவங்களைப் பற்றி எப்படிக் கூறமுடியும்?

சாட்சி:-நான்கைவிரல்களிஞல்தான் கண்களை மூடினேன். அவ்விரல் இடைகளிஞல் மிகுதிச்சம்பவங்களையும் பார்த்தேன்.

சாட்சிதொடர்ந்து சாட்சியமளிக்கையில்தான் எதிரிகளின் கையில் கத்தியிருந்ததைக்காணவில்லையென்று கூறிஞர். நீதிபதிமேல் விசாரணையை இம்மாதம்19ம் திகதிக்குஒத்திவைத்து எதிரிகளை பழைய பிணையில்செல்படியும் 19ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## மருத்துவதாதிமார்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வாரந்த லீவு அற்றவர்களாகவும் பகிரங்க விடுமுறை தினங்களற்றவர்களாகவும் இன்று கடமையாற்றுவதால் சகல கிராம மருத்துவத்தாதிகளும் அம்புலன்ஸ் சேவினர், சாரதி, ஆகியோருக்கு கொடுப்பதைப்போன்ற மேலதிகநேர ஊதியம் தரும்படி சுகாதார மந்திரியிடம் கோருகிறோம்.

கிராம மருத்துவத்தாதிகள், வைத்தியசாலை மருத்துவத்தாதிகள் என்றுள்ள பிரிவினைகளை மாற்றிச் சகலரும் மருத்துவத் தாதிகள் என்ற தோரணையில் கிராம மருத்துவத்தாதிகள் வைத்தியசாலைகளிலும். வைத்தியசாலை மருத்துவதாதிகள் கிராமத்திலும் கடமையாற்றக்கூடிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வடக்கு கிழக்கு, மகாணத்தே கடமையாற்றும் மருத்துவதாதிகள் மேற்பார்வை, மருத்துவத் தாதிகளாக பயிற்சிபெற இன்று வசதிப்படாமையால், தெல்லிப்பளை சுகாதார பயிற்சி நிலையத்திலேயே இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளைக் கையாளுமாறு சுகாதார அதிபரைக் கேட்டுக்கொள்கிறோம்.

## நாசர் பாரதம் வருவார்

புதுடில்லி, செப். 6 ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாசர் அடுத்த மாதத்தில் பாரதத்துக்கு [illegible] விஜயம் செய்யவிருக்கிறார்.

# வவனியா களஞ்சிய நிலையத்தில் தராசு இல்லை!

## தினமும் விவசாயிகள் புகையிரத நிலையத்திற்கு படையெடுப்பு

வவுனியா, செவ்வாய் வவனியாவிலுள்ள உத்தரவாத விலைத்திட்ட களஞ்சிய நிலயத்தில் விவசாயிகளிடமிருந்தும், சங்க மனேஜர்களிடமிருந்தும், கொள்வனவு செய்யும் பொருட்களான மிளகாய், நிலக்கடலை, சின்னவெங்காயம், வவனியா வெங்காயம் போன்றபொருட்களை உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் வாங்கி இப்பொருட்களை நிறுப்பதற்கான தராசு இல்லாததால் விவசாயிகளுக்கு பெரும் கஷ்டமும் தொல்லையும் ஏற்பட்டுள்ளன.

தற்சமயம் களஞ்சியப் பொறுப்பாளர் இப்பொருட்களை நிறுக்கும் பொருட்டு விவசாயிகளுடனும் மற்றும் பொதுமக்களுடனும் வவுனியா புகையிரத நிலையத்திற்கு தினமும் பவனி சென்று குறிப்பிட்ட பொருட்களை நிறுத்துக் கொள்வனவு செய்து வருகின்றார்.

இது சம்பந்தமாக விவசாயிகள் அதிகாரிகளுக்கு முறையிட்டும் ஒரு பலனும் கிடைக்கவில்லையென அறிவித்துள்ளனர் இந்நிலை காரணமாக விவசாயிகள் நேரத்தை விரயக்குவதுடன் தங்கள் பொருட்களை விற்பனை செய்வதிலும் கஷ்டமடைகின்றனர்.

அரசாங்கம் பொருட்களை உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் விற்பனை செய்யும்படி பிரசாரம் செய்து வருகின்ற போதிலும் இது போன்ற செய்கைகள் விவசாயிகளின் நோக்குகளை கட்டுப்படுத்துவதுடன் அவர்களின் உற்சாகத்தையும் குறைத்து விடுகின்றதென பல விவசாயிகள் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளனர்.

## 'தலைசிறந்தது . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதி எம். பி. யும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளருமான திரு. சிவசிதம்பரம், அமெரிக்காவுக்கும் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளுக்கும்சென்றுவிட்டு இரண்டு மாதகாலத்தின்பின் இன்று யாழ்ப்பாணம் திரும்பிய போது பலாலி விமானநிலையத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின்போதுகூறிஞர்.

பலாலிவிமானநிலையத்தில் திரு. சிவசிதம்பரம் இன்று காலைவந்திறங்கியபோது அவருக்கு மிக உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.

தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர்களும், உடுப்பிட்டித் தொகுதிமக்களும் விமான நிலையத்தில் அவரைவரவேற்றனர். திரு. ஆர். என். சிவப்பிரகாசம், ஏழாலைகிராமசபைத்தலைவர் திரு. வி. சிவகுரு, திரு. ஜி.ஜி. பொன்னம்பலம்பலத்தின் மகன் குமார் பொன்னம்பலம், காங்கிரஸ் இணைக் காரியதரிசிகள்திரு. தா. சங்கரப்பிள்ளை, திரு. நா. இராநாயகம். திரு. எம். கே.சுப்பிரமணியம், பருத்தித்துறை நகரசபைத்தலைவர் திரு. என் நடராசா, திரு. என். டி. சிவஞானம்ஆகியோரும். மற்றும் உடுப்பிட்டித் தொகுதிமக்களும் திரு. சிவசிதம்பரத்தைவரவேற்று அழைத்துவந்தனர்

விமானநிலையத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் திரு. நம. சிவப்பிரகாசம் திரு. சிவசிதம்பரம் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் ஜனநாயகம் பற்றிநிகழ்த்தியஉரை தமிழ் இனத்துக்கும்ஈழமணித் திருநாட்டுக்கும் பெருமையளிப்பதாகுமென்ரூர்.

திரு. சிவசிதம்பரம் தமக்களிக்கப்பட்டவரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் அமெரிக்காவில் தாம்பல்வேறு கூட்டங்களிலும் விருந்துவைபவங்களிலும் கலந்து கொண்டதாகவும் தாம் தமிழர்களின் நாகரிகத்தைப்பிரதிபலித்ததாகவும் சொன்ஞர்.

வெளிநாட்டில் மகிழ்ச்சிதரக்கூடிய சூழ்நிலைகள் இருந்தாலும்எனது தொகுதி மக்களின் மத்தியில் இருப்பதைப் போன்ற மகிழ்ச்சி ஏற்பட முடியாது" என்று திரு. சிவசிதம்பரம் கூறிஞர்.

கனடாவில் சர்வதேச பார்லிமெண்டரிச் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு மேலும் ஒன்றரை மாத காலம் வெளிநாடுகளில் இருந்திருக்கலாம். ஆஞல் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐ. நா. சென்றிருப்பதால் இங்கு அதிக வேலை இருக்கிறது. இதஞல் நாட்டுக்கு விரைந்து வந்தேன்" என்று திரு. சிவசிதம்பரம் கூறிஞர்.

விமான நிலையத்திலிருந்து திரு. சிவசிதம்பரம் மோட்டார் கார் ஊர்வலமாக உடுப்பிட்டித் தொகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## தென் ஆபிரிக்க் பிரதமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுகாரணமாக இவர் 1961-ம் வருடத்தில் காமன்வெல்த்லிருந்து விலகிஞர்.

1960-ம் வருடத்தில் இவரைக் கொலைசெய்வதற்காக வெகுசமீபத்தில்வைத்து ஒரு நபர் சுட்டார். இருதோட்டாக்கள் இவர்மீது பாய்ந்தன. ஆஞல் தக்கசிகிச்சையளிக்கப்பட்டு இவர் உயிர் தப்பிஞர். டாக்டர் வேர்வூட்டுக்கு வயது 65

புடாபெஸ்ற், செப். 6 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்கள் எதிர்காலத்தில் போதைவஸ்து உபயோகித்துள்ளார்களா என்ற பரிசோதனைக்கு உள்ளாகவேண்டியிருக்கும்.

## ரொடீஷிய பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த மால்பரோ மாளிகைக்குமுன் நூற்றுக்குமதிகமான ஆரப்பாட்டக்காரர்கள் கூடி நின்ரூர்கள். இவர்களில் ஒருசாரார் ரொடிஷியா பிரச்னையில் பிரிட்டன் கடைப்பிடிக்கும் கொள்கையை ஆதரித்தும் மற்றச்சாரார் எதிர்த்தும் கோஷங்கள் எழுப்பினர்.

ரொடீஷியா பிரச்னை விவாதிக்கும் இருநாட்களிலும் பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் தலைமை தாங்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று டயஸ் ஆஜராவார்

கொழும்பு, புதன் தொலைபேசி ஒற்றுக்கேட்டல் விசாரணை இன்று மீண்டும் ஆரம்பமாகும்போது, முன்ஞள் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் தமது வழக்கறிஞருடன் ஆஜராவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் புரட்டாதி மாதம் 7-ம் திகதி (7-9-66) புதன்கிழமை காலை 10 மணிக்கு வரும் சுபவேளையில் பண்டத்தரிப்பு சந்தைக்கு எதிரில் அமைந்திருக்கும் புதிய கட்டிடத்தில் எமது

"ப. ஜேம்ஸ்"

பலசரக்கு வியாபாரத்தைத் தொடக்கிவைக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமூகமளித்து எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை விரும்பும்
ப. ஜேம்ஸ்

பண்டத்தரிப்பு,
5-9-66.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பெரியகோவில் மேல வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org